உ

# தமிழ்ப் பொழி

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, மாசி } மலர் ௰க


க. பழைய பாடற்றிரட்டு 387
திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்

உ. கல்லாட நூலாராய்ச்சி 395
திரு. E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L.,

ரு. அகவல்பாவின் ஆய்வு 403
திரு. வே. மு. சீனிவாச முதலியாரவர்கள்

ச. ஒருபோலியுரை மறுப்பு 413
திரு. அ. கந்தசாமி பிள்ளை அவர்கள்

ரு. நன்னனும் பரணரும் 419
திரு. வித்துவான்.
ஒளவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்

சு. மதிப்புரை 427

எ. நன்கோடை 427
பொழிற்றொண்டர்


TANJORE. 1937

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

# தமிழ்ப் பொழில்

**தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.**

| துணர் ௰௨ | தாது, மாசி | மலர் ௰௧ |
|---|---|---|

உ

## பழைய பாடற்றிரட்டு.

தமிழ்ப்பேராசிரியர். திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்.

கோகனகத் துக்குநிகர் கொட்டியோ குற்றமற்ற
மாகனகத் துக்குநிகர் வல்விரும்போ—பாகை
கறுப்பமுத லிக்குநிகர் கன்னனே ஏழை
யுறுப்புமுத லிக்குநிக ரோ 1

தெருவடங்க நின்றுநின்று திங்கடொழு வார்போல்
எருவெறிந்து மூட்டுவதிங் கென்னே—மருவடர்ந்த
பாகையரிச் சந்திரனைப் பைந்தாமங் கேளாமற்
றேகையரிச் சந்திரனைச் சூழ்ந்து 2

பத்தில் குறையாது பன்னிரண்டி லேறாது
கொத்தில் படினுங் குறையாது—முத்தத்தில்
மாவி லணுகாது மாங்காயிற் றையாது
காவில் மதனெறிந்த கல் 3

காவல னெங்கள் கயவாகுச் சோளேசன்
மாவிலி கங்கை மணிவாரி—ஆவனலென்
றப்பிலங்கை தோய்ப்ப வதில்வாரி யமுத்தைக்
கொப்புளமென் றூதுங் குரங்கு 4

இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுத்தும்
அம்மை யருநரகத் தாழ்விக்கும்—உம்மை
யருந்தேயுஞ் செய்ய அலர்மகளு நீங்கும்
மறந்தேயும் பொய்யொழுகு வாய் 5

காணத் தொழப்புகழக் கண்ணுங்கையு நாவும்
சேணிந்திர வாணன் சேடன்போல்—வேணும்
பனக சயனக்கரிய பச்சைமால் தேடுங்
கனகசபையிற் சிவந்த கால் 6

அரசனக ளங்கபா னச்சுதப்பன் முற்றத்தி
லரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை
வெட்டிவிடு மோசை மிகும் 7

இந்தோ நுதலழகு ராமரா மாகமலக்
கொந்தோ குவிமுலைகள் கோவிந்தா—சந்ததமும்
வேலிலையோ நீலவிழி வேங்கடவா ணாவயிறு
மாலிலையோ நாரா யணா 8

செம்பியன்மா தேவியை நீர்சேர்வா னேன்சடைபோய்
அம்புவியில் நீர்மொண்ணை யாவானேன்—நம்பரே
பாரத் தனம்போய்ப் பயலாகா ரோஒருவர்
தாரத்துக் கிச்சித்தார் தாம் 9

எரிச்சொரியுந் தோம இளந்தளிர்மேற் புன்கு
பொரிச்சொரியுங் காலமோ போவார்—வரிக்குயிலுங்
காமாக்ஷ வெண்ணாதகாலத்தி னும்—பிரிய
லாமாகா தென்னா தவர் 10

தேமிருக்கு மாந்துளிரைச் செந்தீ வனமென்றே
பூமுருக்கை யத்தீப் பொறியென்றே—நாமிருக்கு
மாப்படுமே யென்றுமிக வாடி மனந்தளர்ந்து
கூப்பிடுமே நோமே குயில் 11

வாரிதர னங்கொழித்து மாவிலையி னூடுபோய்ச்
சேரனாட நாடளவுஞ் சேந்ததே—மூரிமத
னம்போ டயில்பொருகண் மாயிழைக்கு நீகுதிரைக்
கொம்போ குலோத்துங்கா கூறு 12

பூங்கோதை மாதர் புனைகின்ற முத்துவடம்
வாங்கோங் குடிக்கு வடுவென்று—யாங்கள்
முலைக்கொண் டணியிலது முக்கணனார் சென்னித்
தலைக்கோடு பட்ட தழும்பு 13

முத்துநகை யாள்பெறுவள் மூரிக் கடல்கிடந்து
கத்துவதென் கோபமென் காலுக்குக்—குத்திச்
செருப்புக்குத் தோல்வாங்குஞ் சென்னியக ளங்கன்
பொருப்புக்கு நாணாப் புயம் 14

அப்பூருஞ் செஞ்சடைமே லம்புலியைப் பார்த்துப்பார்த்
தெப்போதுஞ் சீத்துப்பூத் தென்னுமே—முப்போதும்
வாலங்காட் டாநிற்கும் வாயங்காக் காநிற்கும்
ஆலங்காட் டான்பூ ணணி 15

எங்கே யவளொருத்தி யாமிருவர் மூவரையும்
பொங்கு மமளி பொறுக்குமோ—சங்கங்
குழையவரால் பாயுங் குருநாடர் கோவே
பழையவரா லென்ன பயன் 16

கார்கொண்ட மேனிக் கருணாகரா கருணைச்
சீர்கொண்ட ராயரே செல்வரே—வாரியே
அள்ளியுண்ட வெண்ணெய்க்கா ஆச்சியடிப் பாளென்றே
பள்ளிகொண்டாற் போமோ பயம் 17

துற்ற கருங்குளவி சூரைத்தூ றூரியப்பேய்
உற்ற சுடுகாட் டுகரையிற்—புற்றில்
வளர்ந்த மடற்பனைமேல் வைத்ததே னொக்கும்
தளர்ந்தவர்க் கொன்றீயாத் தனம் 18

என்னசனி ஞாயிறுபோ யித்திங்கள் வந்துதித்தால்
மின்னியசெவ் வாய்மின் மெலிவளே—உன்னரிய
மன்னுமத னம்புதனால் வாய்த்தவி யாழம்படைத்தாள்
அன்னையெதிர் வெள்ளியா னாள் 19

கம்பத்தானைக் கடையில் கட்டினான் கால்சாய
அம்பைத்தா வித்தான்தா ளானதே—செம்பதுமப்
பூவைகாள் கிள்ளைகாள் பூங்குயில்கா ளெம்முடைய
பாவையா ளாண்ட பதி 20

ஆயன் துயில்வதும் ஆயிழையார் சொல்வதுவும்
வய குருந்திற்கொண் டேறுவதும்—சேய
னிடம்பார மாமுடிமே லெய்துவதும் பச்சை
வடம்பாகு சேலைசோ மன் 21

வருந்தி யொருவன்பால் மற்றொருவன் வந்தால்
பொருந்தி யகமலர்ந்து போற்றி—விருந்தென்று
தன்னா லியன்றன தானுதவா னாயினவற்
கின்னா நரகே யிடம் 22

பண்ணியதோர் பாபம் பறக்குமே பார்மீதி
லெண்ணியதோர் நற்கரும மெய்துமே—வெண்ணெய்
திருடினாரைச் சுமந்த தீரனா ரைச்செங்
கருடனா ரைக்கண்டக் கால் 23

பச்சைத் திருமால் பசித்தழுது மண்தின்னான்
பிச்சைக்கு மீசன் பிறப்பட்டான்—நிச்சயமே
அட்டதிக் கும்பு கழும் ஆரூரபிடேகக்
கட்டளைமுன் னுண்டானக் கால் 24

வெள்ளையா னேறும் விமலிரு தாள்பணியும்
பிள்ளையான் மாதைப் பெருந்தெருவில்—வெள்ளை
யிலைக்கறிவிற் பாள்மருங்கு விற்றுவிடு மென்றே
முலைக்கறிவிற் பாரிலையோ முன் 25

ஆழியா னம்பென்றான் அண்ணலெழுத் தாணியென்றான்
கோழிமான் குன்றெறி வேலென்றான்—ஊழியான்
அங்கை மழுவென்றான் அயிலூர் வருகொல்லன்
சிங்கனுலைக் கரைக்கே சென்று 26

மாலை விளக்கிடுவோ மத்தனையே பின்னும்
காலை விளக்கிடுவோம் கண்டீரோ—கோலக்
கரிய மாணிக்கன்தன் கப்பல்சூழ் நாட்டில்
பரிய மாணிக்கம் பல 27

பூத்தால் முகிலொக்கும் பூங்குழற்கு வொண்புளகம்
வாய்த்தால் மலையொக்கு மாமுலைக்குக்—காத்தான்
சிறுவைத் துடியிடையின் செம்முகத்துக் கொக்கு
மறுவைத் துடைத்தால் மதி 28

வம்பெல்லாங் கொம்பே மலர்சுமந்த மாவே
கொம்பெல்லாம் கொள்ளாவடுக் கொண்டாயே—முன்பு
சிறந்தார்க்கு மால்கொண்டாய் செம்பியன்றன் னாட்டில்
மறந்தார்க்கு வைத்தாய் வடு 29

கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்
கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத்
தாதகத்து நான்முகனுந் தாதையுந் தேடிக்காணு
வோதி வித்தார் வாழுமழுந்தூர் 30

பாதி மதியென்பள் பகலையிராவென்பள்
காத லிளைஞோரைக் காட்டென்பள்—ஓதும்
திரிச்சிராப் பள்ளியென்பள் தெய்வமேயென்பள்
தரிச்சிராப் பள்ளிகொள்ளாள் தான் 31

முலையு மிடையை முனிவற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்றாள்—மலையில்
சிராப்பளியா னேறிவரும் சேவின் பணி யோசையைக்கேட்
டிராப்பளியுங் கொள்ளா ளிவள் 32

உன்றன் மகளை யொறுப்பதற்குக் காரியமென்
என்றன் மகளு மிதுவானாள்— என்றன்மகள் [கேட்
செந்திருப்பாலைக்குடியான் சேவின்மணி யோசையைக்
டெந்திருப்பாலைக்குடியா ளின்று 33

வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியென்றும்
கண்ணனிவ னென்றுங் கருதாரோ—மண்ணை
யடிப்பதுமத் தாலே யளந்தானை யாய்ச்சி
யடிப்பது மத்தாலே யழ 34

வையம் வளர வளருந் திருவுந்தி
செய்ய பவளவாய்ச் சிற்றாயர்—ஐயன்
குடிப்பதும் தாம்பாலைக் குடித்தானென் றாய்ச்சி
யடிப்பதும் தாம்பாலே யழ 35

எற்கவே கற்பித்தா யேற்பதுபோ லீவதுவு
மேற்கவே கற்பித்தா யில்லையே—போர்க்கலக
வாளர் விழிப்பரவை வாசலுக்குத் தூதுசென்ற
தாளா தியாக விநோதா 36

ஒருபக்க மாத ரழுகுரலு மோவா
தொருபக்க மோரிக் குரலு—மொருபக்கம்
தீகதாவு புகையு மாயிற்றே தெவ்வடுபோர்
மாகதா நீமுனிந்த மண் 37

கொற்கையான் மாறன் குலசேகரப் பெருமான்
பொற்கையா னானகதை போதாதோ—நற்கமல
மன்றலே கொண்டென் மணிவாசலை யசைத்த
தென்றலே யேன்செய்தாய் செப்பு 38

மிகப்பட்ட வெம்பசியின் வீழ்பருந்தின் காலி
லகப்பட்ட கோழிப்பார்ப் பானேன்—சிகப்பட்ட
கல்லையோ ரக்கொடுநாழு தேன் காமனு காமலையி
வில்லையே ரத்ன கிரியே 39

ஈட்டு புகழ்பாண நீயெங் கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவும்—கேட்டிருந்து
பேயென்று என்னை பிறர்கூறியென் றூர்பாங்கி
நாயென்றாள் நீயென்றேன் நான் 40

பறவைப் பகைஞர் பாதிப்பேர்க் காகக்
குறவாகொடு வந்தளக்குங் கூலி—மறவர்
திறங்கடிந்த வேல்முருகர் சிவேலர் நாட்டில்
முறங்கடந்த வேயீன்ற முத்து 41

வட்டமதி யைக்குபிலை மாரவே ளைப்பனந்தாள்
பட்டனைநான் நோவதென்ன பாவியே—கெட்டவிழி
காகத்தைக் கண்ணுதலைக் கண்ணுதலும் காரமாம்
நாகத்தை நோகாமல் நான் 42

ஒருவர்க் கிடமா யுகந்திருந்த பாய
லிருவர்க் கிடனான தென்னோ—மருவலரைக்
கல்நாட்ட வில்நாட்டுங் கண்டன் கரிகாலன்
தன்னாட் டியலிதுவோ தான் 43

ஆடுந்திரிகை கற்றோன் றாடுமுன்ன மாயிரஞ்சுற்
றோடுங் கவலையெனக் கோயாதோ—நீடுகிரி
பந்தாட வேலெறிந்து பாரமலை யைத்துளைத்த
கந்தா கருணா கரா 44

## விருத்தம்

குடக்கினிற் றராங்கமும் வடக்கினிற் கலிங்கமும்
குணக்கினிற் பசும்பொனுங் குளித்தகெதற் கிலாரமும்
அடிப்பரப் புடைக்கலத் தனேக வண்ண மாகவந்
தஞ்சுவண்ணமும் தழைத்தறத்தின் வண்ணமானவூர்

கடற்கரை குவித்திடு சந்தனத்தை யிந்துடன்
கலந்திறைக்கு மந்தியைக் கனன்று முசுவின்குலம்
புடைப்பதற் கெழுந்து கைமுறுக்கலு முக்கிவாய்
புக்கமுத்தை விட்டெறிந்து பூகமேறு நாகையே 45

வண்டுகிண்டிய மாலையோதி குணக்கிலேவரு மருதமோ
மன்னு நூபுரமோ பயோதரமூவரும் வானவர் கணிகையோ
அண்டர்பூபதி வனிதையோமுக மமுதவாய்மொழி தும்பியோ
அரிதன்னுயுதமோ பிறந்தக மன்னமென்ன யுலாவுவீர்
கொண்டநன்பு முதாரமுந் தவளுநுதபாகன காசலன்
குத்திவல்லைய ராயபூபதி வீரதூர்க்கையன் வரையிலே
துண்டமாமதி சூடிகைச்சிலை நாணெனப்பல சொல்கிலீர்
தூரமோ வதிபாரமோ வுயர்சோணுக் கணிதொங்கலே 46

## வெண்பா

கொன்றை மலரணிந்தான் கோபாலன் கோனிரையில்
நின்றுகுழ லூதினா னீள்சடையோன்—மன்றதனி
லக்கணிந்தான் மாய னரவணைமேற் பள்ளிகொண்டான்
சிக்கலே வாழுஞ் சிவன் 47

துற்றபுகழ்ச் சூரப்பச் சோழர்கோ னுண்டியப்பன்
கற்றவருக் கேகொடுக்குங் கையேகை—மற்றவர்கை
யாக்கை சலாகை யலகை பலகைபுகை
காக்கை துளைக் கொட்டுங்கை 48

பண்டை வினைவாராது பார்மீதில் மன்னவனைச்
சண்டன் பெரும்படையைச் சாடலாம்—தொண்டரீர்
சிறியெடுத் தாடுகரச் சேவல்பிடித் தேறுமயில்
ஆறுமுகத் தானை நினைந்தால் 49

குன்ற மெறிந்த குமரா கொடுங் குன்றம்
மன்றெரிந்த வள்ளி மணவாளா—சென்றதிசை
மாற்றான் மடிய வரவேலு மாமயில்மேல்
நீற்றான் திருமகனே நீ 50

உ

# கல்லாட நூலாராய்ச்சி

திருவாளர் E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L., சேலம்.

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 10. பக்கம் 354.)

திருஞானசம்பந்தர் கூறிய 14 அடியார்கள், திருஞான சம்பந்தருக்கு முற்பட்டவராவர். கல்லாடத்தில் இவ்வடியார் களில், கண்ணப்பர், காரைக்காலம்மை, மூர்த்திநாயனர், சாக்கியர் ஆகிய நால்வரை கூறப்பட்டிருப்பதால் இவ்வடியார்கள் கல்லாடருக்கு முற்பட்டவர் என்றும் இவர்களில் பின் கூறப்பட்ட மூவரும் மணிவாசகனர் கூருததால் கல்லாடருக்கு முற்பட்டவரென்றும், மணிவாசகனர் கண்ணப்பரையும், சண்டேசரையும் கூறுவதால் இவ்விருவடியார்களும் மணிவாசனர்க்கு முற்பட்டவரென்றும் திருமறைமலையடிகள் கூறுவர்.

கல்லாடரும், மணிவாசகனரும் தமக்கு முற்பட்ட அடியார் களின் தொகையை கூறும் கடப்பாட்டை மேற்கொண்டிருந்தாராயின் அடிகள் கூறிய காரணம் பொருத்தமானதாகும். திருஞானசம்பந்தர் தலத்தொகை கூறியது போலவும் சுந்தரமூர்த்திகள் அடியார்தொகை கூறியதுபோலவும் இவ்விருவரும் கூறினரல்லர். அடிகள் கூறிய துண்மையாயின் மணிவாசகனருக்கும் முன்னிருந்த கோச்செங்கண் சோழனரை மணிவாசகனர் கூருத காரணமென்னை? காரணம் கூறவியலாதாகலின் அடிகள்கொண்ட கருத்து, வழுவுடையதாகும்.

கல்லாடர் திருஞானசம்பந்தருக்கு முற்பட்டவராயின் கல்லாடர் கூறியுள்ள திருவிளையாடல்கள் அறுபத்துநான்கெனும் தொகை எங்ஙனம் பெறப்படும்? திருவிளையாடல்கள் அறுபத்து நான்கில், பாண்டியன் வெப்புத் தீர்த்ததும், சமணரைக் கழுவேற்றியதும், சான்றழைத்ததும் ஆகிய மூன்றும் நீக்கப்பட வேண்டும். கல்லாடர் காலத்துக்கு முன்நிகழ்ந்த திருவிளை

பாடல்கள் 61 என்றே தொகை பெறப்படும். கல்லாடர் 64 என்று கூறியிருப்பதொடு முரண்படும். இவ்வகையானும் திரு. மறைமலையடிகள் கருத்து வழுவுடையதாகும்.

இவ்வாராய்ச்சியாளர் மணிவாசனர் காலத்திற்கு முன்பு 54 கோயில்களே இருந்தனவென்றும், பிற்காலத்தில் கோயில்கள் பல்கி யிருந்தனவென்றும் அதனல் தேவாரங்களில் 274 கோயில்கள் கூறப்பட்டிருக்கின்றனவென்றும் ஓர் காரணம் கூறுவர். மணிவாசகனர் மற்றை நாயனரைப் போல தலத் தொகைகள் கூறவில்லையென்பதை யறிக. போற்றித் திருவகவலில் சிலதலங்களில் எழுந்தருளியுள்ள பெருமானின் புகழ்களையே கூறியுள்ளார் எனவே மணிவாசகனர் கோயிலின் தொகை கூறினரென்னும் கருத்து வலியுறு தென்பதையறிக.

இனி மணிவாசககனர் காலத்திற்கு முன்பு பலகோயில்கள் இருந்தன வென்பதையும் அவைகளில் சிலவற்றில் செங்கண் சோழனர் செய்வித்த பணிகளையும் இங்குக் கூறுவாம்.

திருமங்கை மன்னன் தாம் பாடியருளிய திருநறையூர் பதிகத்தில்,

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு
எழில்மாட மெழுபதுசெய் துலகாண்ட
திருக்குளத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்"

என்று சோழன் செங்கணன் பணிவித்த கோயில்கள் எழுபதென்றுத் தொகை கூறியதுள்ளது காண்க. இப்பதிகத்தில் மற்றைப் பாசுரங்களில் சோழன் செங்கணனையே புகழ்ந்து பாடியுள்ளராதலால் இங்கும் அச்சோழனையே குறித்தாரென்க. இச்சோழனர் பலதளிகள் பணிவித்தாரென்று நாயனர்களாலும் புகழப்பட்டுள்ளார். திருமருகல் மாடக்கோயில் பதிகத்தில்,

"வையம் மகிழ்தர வைகல் மேற்றிசை
செய்யவ ளவன்முன் செய்த கோயிலே"

என்றும், திருவம்பர்ப் பெருங்கோயிற் பதிகத்தில்,

"அருசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குருசில் செங்கண்ண வன்கோயில் சேர்வீரே"

என்றும் திருஞானசம்பந்தராலும், நன்னிலத்துப் பெருங் கோயிற் பதிகத்தில்

"திரைபொரு பொன்னிநன்னீர்த் துறைவன்றிகழ் செம்பியர்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தனனே" [கோன்
"கோடுயர் வெங்களிற்றுத் திகழ்கோச் செங்கணன்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தனனே"

என்றும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் செங்கணன் பணியைப் பாராட்டப் பட்டுள்ளது காண்க.

இக் கோச்செங்கணன் செய்வித்த கோயில்கள் மாடக் கோயில் என்றும், பெருங்கோயில்கள் என்றும் பெயர் பெற்று விளங்கினபோலும். முன்பாசுரங்களிலும் இப்பெயர்வந்துள்ளது நோக்கியோர்க.

திருநாவுக்கரையரும், பொதுத்தாண்டகத்தில்,
"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்பெருங்
கோயில் எழுபதினோ டெட்டும்" என்று அருளியுள்ளதும் செங்கண் சோழனர் செய்வித்தகோயில்களையேகுறிக்குமென்னலாம். நாவுக்கரையர் 78 கூறியுள்ளதைக் குறிக்க.

இவ்வகை ஆழ்வார் வாக்கு நாயனர் பதிகங்களால் சான்றுறுவதையறிக. இதனல் சோழனர்காலத்து 70, 78 கோயில்களேயன்றிப் பலகோயில் இருந்தனவெனப் பெறப்படும். பதிகங்கள் பெற்ற தலங்கள் சிலவேயென்க. இதனை யோராது திருமறைமலையடிகள் மணிவாசகனர்காலத்து 54 ஆலயங்களே இருந்தனவென்பது பொருந்தாது. அன்றியும் ஆலயமில்லா ஊர்பாழ் என்னும் பழமொழியை இங்குஞாபகமூட்டுவேன். எண்ணிறந்த தலங்களில் மணிவாசகனர் வழிபாடு கொண்ட தலங்கள் சிலவே யென்பது பொருந்துமாறறிக.

திரு. மறைமலையடிகள் திருப்பெருந்துறையில் மணிவாசகனர் காலத்தில் கோயில் இல்லையென்னும் கூற்றை யாராய்வாம். இவ்வாராய்ச்சியாளர் நூல்களின் காலத்தையாராய முயலாது நம்பிகள் புராணம் சேக்கிழாருக்கும் முற்பட்ட தென்றார்.

நம்பிகள் ஆலயம் ஒன்று திருப்பெருந்துறையில் இருப்பதாகக் கூறியுள்ளார். பரஞ்சோதியார் கோயிற்றிருப்பணிக்கும் அடிகள் தாம் எடுத்துக்கொண்டுபோன பொருளை செலவழித்தாரென்று கூறுவர். திருவிளையாடற் புராணத்தார் காலத்தும் திருப்பெருந் துறையில் கோயிலிருக்கவில்லை யென்று கூறுவதற்கு அக்கோயி லில் இப்போது விஜயநகரவரசர்கள் சாசனமே கிடைப்பதைக் கூறி 15, 16ம் நூற்றாண்டின் முன்னர் அமைக்கப்பட்ட கோயி லென்றும் பொருள்படும்படிக் கூறிச்செல்வர். கோயில்களைப் புதுக்குவார் பலரும் பழைய சாசனச் சான்றுகளை மீண்டும் பொறித்து வைக்கும் வழக்கை ஆளவில்லை யென்பதற்கு பல திருட்டாந்தங்கள் உளவென்பதை இவ்வாராய்ச்சியாளர் கருத வில்லை. இவ்வகையில் பெருந்துறைப் பழங்கோயில் விஜயநகரச் சக்கரவர்த்திகள் காலத்திற்குமுன்பு புதுக்கப்பட்ட தென்ன லாம். கடவுண்மாமுனிவர் புராணம் மிகப் பிற்காலத்ததென்று இவ்வடிகளே பலவிடத்தும் ஒதுக்கித் தள்ளுபவர் இந்நூலில் தமது கருத்துக்கிசைந்ததோர்வழுவான கூற்றைத்தழுவி, பழைய நூல்களைப் புறக்கணித்ததன் பயனாக, ஆதரவுபெறாது வழுக் குண்டாராவர். இவற்றான் இவ்வாராய்ச்சியாளர் தமதுமதத்தை நாட்டப் புகுந்தாரேயன்றி உண்மை யறிய முயன்றாரில்லை யென்பது தெளிவாம். மணிவாசகனார்க்கு இறைவன் காட்சி கொடுத்தது ஓர் சோலையிலென்று கடவுண் மாமுனிவர் கூறி யதைக் கடைப்பிடித்து இவ்வாராய்ச்சியாளர் அவர் கருத்தே உண்மை யென்றும் சாதிக்கப் புகுந்தபோது,

> "செந்தழல்புரை திருமேனியுங்காட்டி
> திருப்பெருந்துறை யுறை கோயிலுங்காட்டி"

என்னும் திருப்பள்ளி யெழுச்சியின் அடிகள் திரு. மறைமலை யடிகள் நினைவிற்கு வரவில்லை போலும்.

அன்றியும் ஆகமங்கள் கோயில் வழிபாட்டிற்கே யெழுந் தன வென்று கூறுவாருளர். அடியார்கள் ஆகமங்களையே சிறந் தனவாகக் கருதுகின்றவராய், கோயில்கொண்டருளியுள்ள பெரு மானின் சிலையுருவங்களை வணங்கிப் பதிகங்கள்பாடி வந்தன ரென்பது நன்கறிந்த தொன்றாம். கோயிலில்லாத் தலங்களுக்கு

அடியார்கள் பதிகம் பாடினரென்று யாண்டும் கண்டதுமிலம் கேட்டதுமிலம். திருமறைமலையடிகள் கூற்றுப் புதுமை யாத் தோன்றும். இவ்வாறு இவ்வடிகள் கூறும் புதுமைகளில் கட்டளைக் கலித்துறை பாவினங்களில் ஆதித் தோற்றத்தையுடையதென் பதும் மற்று ஒன்றும்.

தொல்காப்பியர் நாலசையை அடிப்படையாகக் கொண்டு செய்யுளியல் யாத்தனர். நால்வகையசை கொள்ளின் சீர்களின் வாய்பாடு பல்குமாதலின் மாணவரறிவதற்கு கடினமாயிருக்குந் தன்மையைநோக்கி தொல்காப்பியரோடு ஒத்த காலத்துப் புல வர்கள் செய்யுளியலைச் சுருக்கமாகக் கூறமுயன்று பலவகை யாப்புநூல்கள் யாத்தனர், யாப்புநூல்கள் பல்கியதுபோல மற்ற வியல்களுக்கு தனிநூல் இயற்றப்படவில்லை யென்று கூறலாம். பல்காயனார், பல்காப்பியனார், பரிமாணனார் காக்கைபாடினியார் போன்றோர் பதின்மருக்குமேல் யாப்புநூல்கள் இயற்றின ரென்பது

"தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்
பல்காய னார்பகுத் துப் பகர்ந்தனர்—நல்யாப்புக்
கற்றார் மதிக்குங் கலைகாக்கை பாடினியார்
சொற்றார்தந் நூலுட் டொகுத்து"

என்னும் யாப்பருங்கல மேற்கோள் வெண்பாவாய் அறியலாகும். இப்புலவோர் அசை இரண்டாகவே கொண்டு யாப்பியலை யாவ ரும் எளிதிலுணருமாறு ஒவ்வோர் நூலை யாத்தனர். இவ்வாசிரி யர்கள் பாவினமுங் கொண்டார். தொல்காப்பியர் அடிகளுக்கு எழுத்து அளவை கொண்டார். இவ்வாசிரியரிற் பெரும்பாலார் எழுத்துக் கணக்களவு வேண்டிலாரலர். இந்நூல்கள் தோன்றிய பின்னர் தொல்காப்பியர் செய்யுளியல் கரந்துறையுந் தன்மை பெற்றதாகும். பாவினங்களே நிலைபெற்றன. பாவினங்கள் தாழிசை, துறை, விருத்தமென்னும் பாகுபாடு தொன்மை வாய்ந்தது.

"நாலசைச் சீரும் ஓரோவிடத் தியலும்
பாவொடு பாவினம் பயிற லின்றி" என்பது

நற்றத்தனார் சூத்திரமென்ப. இதில் பாவினம் குறிக்கப் பட்டிருத்தல் காண்க. இப்புலவர் சங்ககாலப் புலவராவர். இவரோடொத்த காலத்தவரென்று கருதப்படும் காக்கைபாடினியார்,

"விருத்தந் துறையொடு தாழிசை யென்று
வினச்செய்யு ளெல்லா வடியினு நடக்கும்"

என்று தாழிசை, துறை, விருத்தம் என்றும் பாவினங்களின் வகை கூறியுள்ளதுமறிக இப்பாவினங்களின்வகையில் எது முன் தோன்றியதென இதுபோது கூறுவதற்கு சான்றகப்படாதாயினும் கலித்துறையின்பாற்படும் கட்டளைக் கலித்துறையே முதன் முதல் 2ம் நூற்றாண்டில் தோன்றிற்றென்று திரு. மறைமலையடிகள் கூறுவர். தமது கூற்றுக்குச் சான்றில்லையாதலின் பாவினங்களின் வரலாற்றைத் தமக்கு ஆதரவாகக் கூறத் தொடங்கினர். இவ்வாராய்ச்சியாளர் கூறும் வரலாறு தலை தடுமாற்றத்தையுடைய தென்பதைக் காட்டுவாம்.

முன் காட்டிய காக்கைபாடினியர் சூத்திரத்தால் கலிப் பாவினங்களில் கலித்துறை ஒன்றாதும். இப்பெயர் ஐந்து சீரான் ஆக்கப்பட்ட அடியைக் குறிக்கும். இவ்வடிக்கு,

"ஐஞ்சீர் முடிவி னடித்தொகை நான்மையொடு
எஞ்சா மொழிந்தன வெல்லாங் கலித்துறை"

என்னும் காக்கைபாடினியார் சூத்திரத்தில் எழுத்துக் கணக்கு கூறப்படாமையறிக. 10ம் நூற்றாண்டில் தோன்றின யாப்பருகலத்தினும்

"நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை"

என்று ஐஞ்சீருடை யடியே கலித்துறையென்று கூறியிருத்தல் காண்க.

இந்நூல் 10ம் நூற்றாண்டின் முதலில் தோன்றியதாகும். இக்காலத்தில் ஒருவகை கலித்துறைக்குக் காரிகையென்னும் பெயர் நிலவிற்றுபோலும். இந்நூலைப் பின்பற்றி செய்யப்பட்ட யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல் எழுத்தளவையுடைய கலித்துறையடியால் யாக்கப்பட்டுளது. இவ்வெழுத்தளவையுடைய கலித்துறை 11ம் நூற்றாண்டில் கட்டளைக் கலித்துறையென்றும் விருத்தமென்றும் கூறப்பட்டது. இதனைக் குறித்து

யாப்பருங்கல விருத்திகாரரும் இக்காலத்தார் சில கலித்துறைகளை விருத்தமென்றும், கட்டளைக் கலித்துறையென்றுங்கூறுவர் என்றார். இக்காலத்தில் தொகுக்கப்பட்ட திருமுறைகளில் சில பதிகங்களுக்கு திருவிருத்தமெனறுப், வைணவப் பிரபந்தமான நம்மாழ்வார் பதிகங்களில் சிலவற்றுக்கு திருவிருத்தமென்றும் பெயர் கொடுத்துக் கூறியுள்ளதை யறிக. நம்பியாண்டார் நம்பிகள் தாமியற்றிட நூலுக்கும் கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம் என்னும் நாமம் சூட்டியுள்ளதையுங் காண்க. கட்டளைக் கலித்துறையென்னும் பெயர் பெருவழக்காக இக்காலத்தில் வழங்காததறிக. யாப்பருங்கல விருத்திகாரரும் உரைச் சூத்திரங்கள் பலவிடத்தும் கூறிச் செல்லும் திறம் வாய்ந்தவர் கட்டளைக் கலித்துறைக்குச் சூத்திர முரையாததாலும் இப்பெயர் பெருவழக்குப் பெறவில்லையென்பது பெறுதும், இவ்வாசிரியர் 11ம் நூற்றுண்டினிடைக் காலத்திலிருந்தவராவர். 12ம் நூற்றுண்டிலிருந்தவராகக் கருதப்படும் யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் தமது உரையிலே கட்டளைக் கலித்துறைக்குச் சூத்திரம் உரைத்தார்போலும், இஙகாறும் கூறியவாற்றுல் கட்டளைக் கலித்துறை என்னும் நாமம் நிலவியது 12ம் நூற்றுண்டிற்கு முற்பட்டதாகாது. இது 10ம் நூற்றுண்டில் காரிகையென்னும் பெயராலும், 11ம்நூற்றுண்டில் விருத்தம் என்னும் பெயராலும் விளங்கியது. எழுத்தெண்ணும் அளவையுடைய கலித்துறை 10ம் நூற்றுண்டிற்கு முற்பட்டதாகாது. எழுத்தெண்ணும் வழக்கு தொல்காப்பியர் காலத்தே வீழ்ந்த வழக்காயிற்று. பின்னர் 10ம் நூற்றுண்டு முதல் ஒருசார் கலித்துறைக்கு எழுத்துக் கணக்கு சில ஆசிரியர் வேண்டினர். இவ்வழக்கு நிலைபெறுவதற்கு இருநூற்றுண்டு சென்றது. இதன் பின்னர் ஒருசார் எண்சீர் ஆசிரிய விருத்தமும் எழுத்தளவை பெற்று கட்டளைக் கலிப்பா என்னும் நாமம் பெற்றது. கட்டளைக் கலித்துறை பிற்காலத்ததென்று சிலவாராய்ச்சியாளர் கூறி மணிவாசகனர் நூலும் பிற்காலத்ததென்று கூறுவதை மறுப்பதற்கு மறைமலையடிகள் அந்தத்தில் தோன்றியதை ஆதியில் தோன்றினதென்று கூறப்புகுந்தது ஓர் வியப்பைத் தருகின்றது.

இவ்வாராய்ச்சியாளர் திருமுறை தொகுக்கப்பட்ட வரலாற்றையும் கவனிக்கவில்லைபோலும். திருமுறை கண்ட புராணகாரர் ஆராய்ச்சியறிவு வாய்ந்தவரல்லரென்று இவ்வடிகள் கூறியிருப்பது பொருத்தமாகும். இவ்வுரைக்குக் கார்மண்டலசதகம் துணைபுரிவதைக் கூறுவாம்.

"தலைச்சங்கணிந்த தடக்கைப் பெரும்புயல் தண்டமிழ்சூர்த்
தொலைச்சிக்குடுமிப் படைகொள் பரமன் சுருதிமறை
மிலைச்சிப் புகழ்பெற்ற நாதமுனிநம்பி வேந்திரவர்
மலைச்சிக்க பூபதிவாழ்க்கையர் காராளர் மண்டலமே"

என்று கார்மண்டலசதகத்தார், திருமுறைநம்பியாண்டாராலும், திவ்விய பிரபந்தம் நாதமுனிகளாலும் சிக்கபூபதி வேண்டுகோளுக் கிணங்கித் தொகுக்கப்பட்டதென்னும் பொருள் படும்படி கூறியுள்ளார். இச்சதகத்தர் 11ம் நூற்றாண்டின் பிற்பாதியில் வாழ்ந்தவராவர். திருப்பதிகங்கள் தொகுக்கப்பட்ட வரலாற்றின் உண்மை இதுவேயாகும். திருமுறைகண்ட புராணத்தார் 13, 14-ம் நூற்றாண்டில் இருந்தவராவர். அவர் கூறிய வரலாறு கற்பனையேயாகும்.

நம்பியாண்டார் நம்பிகள் திருமுறையில் மூவரின் பதிகங்களையே தொகுத்தாராவர். எட்டாந் திருமுறையில் கண்ட கங்கைகொண்ட சோளேச்சுரம் ராஜேந்திரன் வடதேசம்வென்ற வெற்றிக் குறிகுறியாக 11ம் நூற்றாண்டினிடையில் கட்டப்பட்டதாகும். அக்காலத்திற்கு முன்பே நம்பியாண்டார் இறைவனடி நீழலடைந்தாராவர். எனவே 8 முதல் 12 திருமுறைகள் 12ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டனவாகும் என்பது தெளிவாம். எழுத்தெண்ணும் அளவைப்பெற்ற கலித்துறைக்கு இக்காலத்தில் கட்டளைக் கலித்துறையென்ற பெயரே நிலைபெற்றதால் அப்பெயரை திருவாசகத்தின் சில பதிகங்களுக்குச் சூட்டினாரென்றல்வேண்டும். கட்டளைக் கலித்துறை என்னும் பெயர் திருவாசகத்தில் காணப்படுவது திருவாசகம் தொகுக்கப்பட்ட காலத்தை குறிக்குமேயன்றி மணிவாசகனார் காலத்தைச்சுட்டிக் காட்டாதெனத் தெளிக.

இனித் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் பயிலப் பட்டுள்ள சொற்களின் தன்மையறிய முயலுவாம்.

(தொடரும்.)

# திருவாசகத்தே "நமச் சிவாய வாஅழ்க" என்ற அகவல் பாவின் ஆய்வு

திருவாளர். வே. மு. சீனிவாச முதலியார் அவர்கள், காஞ்சீபுரம்.

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 10. பக்கம் 382)

7. பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க.—பிறத்தற்கு ஏது ஆகிய தீயவினைகள், உயிர்களைப் பற்றுமல் தடுக்கும் சிவபெருமான் உடைய திருவடிகள் வெல்க.

கழல் என்பது ஆண்மை மிக்கார் அணியும் கால் அணி-பிறப்பு- ஆகுபெயர். பெய்கழல்கள்- அடிகள்; அடை அடுத்த ஆகுபெயர். அப்பெயர், உவமை அடியாக அணிக்கு ஆகிப்பின் அவ்வணியை அணியப்பட்டகாலுக்கு இடவாகுபெயர் ஆயிற்று. அது கழற்சி வித்தின் வடிவாக பொன்னுல் செய்யப்பட்டதும், அதன் உள்ளே முத்து முதலிய மணிகளைப் பரல்களாகப் பெய்யப் பட்டதும் ஆகிய மணிகள், பலவற்றைக் கூட்டி ஆக்கிய ஒரு வகைக் கால்அணி-.அது சிறுபிள்ளைகட்குக் காலில் அணியப்படும் சதங்கை— கிண்கிணி போன்றதும், அல்லது தெருக்கூத்தர்கள், கூத்தின் பொருட்டுக் காலில் கட்டிக்கொள்ளும், கச்சை-கெச்சைபோன்றதும், ஆம். சதங்கை—செதங்கை, சலங்கை செலங்கை, கச்சை—கெச்சை ஆகிய இப்பெயர்கள் யாவும், வழக்காற்றில் கழலின் வித்துப் போன்ற ஒருவகை மணியைக் குறித்தலை நினைக்க- கச்சை- வடசொல்திரிபு. கழல்-தமிழ்ப் பெயர். அது முள்செறிந்த ஒருவகைக் கொடிப்பொருள் "பெய் கழல்கள்" என்பது, கழல் வித்து அன்ன பல மணிகளைத் தொகுத்து ஆக்கிய அணி ஆதலால். பெய்தல்-நெருங்கல்; அவ்வணிக்கு அடை இவ்வேதுவினுல் "பெய்கழல்கள்" என்ற தொடரை ஆகு பெயராகக் கொண்டு திருவடிகள் எனலே பொருத்தமும் கவிக்கருத்தும் ஆம்-அன்றி, அடிகள், எண்ணப் பதிகத்தே பா இரண்டில். "உன் பெய்கழல் அடிகாட்டி" என்றூர்கள் ஆதலால், (பெய்கழல் அடி—கழல்பெய்அடி; மொழி

மாற்றம்) இவண் பெய்கழல்கள் என்றதொடரைத் தளை தட்டாமைப் பொருட்டுப் "பெய்கழல் தாள்" எனத் திரித்துக் கொள்ளுதலும் சாலச் சிறப்பு ஆம். அன்றி, "பேர்கழல்கள்" எனத் திரித்துக் கொள்ளுதலும் ஆம்.

இவ்வகை அன்றி, "பெய்கழல்கள்"—வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைப் பெயர்(திருவடி)எனல் பொருத்தம் அன்று. அதன் ஏதுமேல் வருமாறு—நன்னூலுள், "தொக்குழிமயங்குந" என்ற பொதுவியல் சூத்திரத்தின் உரைக் குறிப்பில்உரை ஆசிரியர்கள், "தாழ்குழல்" என்றவினைத்தொகைத் தொடரை (அன்மொழித் தொகைப் பெயராகக் கொள்ளுதற்கு) "தாழ்ந்த குழல்-தாழ்ந்த குழலினைஉடையாள்" எனச்செய்வினை வாய்பாட்டால் விரித்து வினை உருபு மயக்கங் கூறினர்கள். "தாழ்த்தப்பட்டகுழல்—தாழ்த்தப்பட்டகுழலினை உடையாள்" எனச் செயப் பாட்டு வினை வாய்பாட்டால் விரித்து வினை உருபு மயக்கம் கூறிற்றிலர். (வினைத்தொகைத் தொடரை)செயப்பாட்டு வினைவாய்பாட்டால் வினைஉருபு விரித்து அன்மொழித்தொகைப் பெயர் கூறுதல் நேர்மை ஆயின், "கொல்யானை" என்ற வினைத் தொகைத் தொடரைக் "கொன்றயானை—கொல்லப்பட்டயானை" என இருவகை வினை வாய் பாட்டாலும் வினை உருபு விரித்துக் கூறியபடி, ஆசிரியர்கள், "தாழ்குழல்" என்ற வினைத் தொகைத் தொடரையும் "தாழ்த்தப்பட்ட குழல்—தாழ்த்தப் பட்ட குழலினைஉடையாள்" எனச்செயப்பாட்டுவினைவாய்பாட்டாலும், வினை உருபு விரித்துக் கூறி இருப்பார்கள். ஒரே சூத்திரத்தின் உரையில் ஒருவகைத் தொடரையே பொருள் கொள்ளுதற்கு ஏற்றவாறு ஒருவகைப் பொருள்கோளுக்குச் செய்வினை வாய் பாட்டாலும், மற்றோர்வகைப் பொருள் கோளுக்குச் செய்வினை, செயப்பாட்டுவினை ஆகிய இருவகை வினை வாய்பாட்டாலும் வினை உருபு விரித்து மயக்கம் கூறிய ஆசிரியர்கள், (தாழ்குழல்-என்ற வினைத்தொகைத் தொடர்ச்) செயப்பாட்டு வினை வாய் பாட்டால் வினை உருபு விரித்து அன்மொழித் தொகைப் பெயரைக் குறியாமையால் இவண் "பெய்கழல்" என்ற தொடரைச் "செறிக்கப்பட்ட கழலினை உடைய அடி" எனச் செயப்பாட்டு

'வினை வாய்பாட்டால் வினை உருபு விரித்து வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைப் பெயர் எனல் தொல்லை நல்லாசிரியர் தம் மரபின் மாறும். அன்றி,

தாம் குழல் என்ற வினைத்தொகைத் தொடரைத் "தாழ்ந்த குழலினை உடையாள்" என விரித்து அன்மொழித் தொகைப் பெயர் கொள்ளுங்கால், குழலாகிய சினைக்கு ஏற்ற பெண்ணாகிய ஒரு முதலை வருவித்துக் கொள்ளல் மரபு-அதுபோல அடிக்கு ஏற்ற ஒரு முதலை வருவித்தற்கு இல்லாமல் இவண், அடியாகிய சினைக்கு ஏற்ற பிஞ்ஞகன் என்ற பெயராகிய முதல் (தொகாமல்) விரிந்து நிற்றலாலும், அப் பிஞ்ஞகனாகிய முதல் ஆறன் உருபு சுட்டிய "தன்" என்சாரியையேற்றுப் "பிஞ்ஞகன் தன்" என உடைமைப்பொருளை(சினையாகிய அடியை) அவாவி நிற்றலாலும், "பெய் கழல்கள்" என்ற தொடரை இவண், வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகைப் பெயர் (திருவடிகள்) எனல் பொருத்தம் அன்று.

8. புறந்தார்க்குச்சேயோன் தன் பூங்கழல்கள்வெல்க.—தன் இடத்தே அன்பு வையாமல் புறத்தே அன்பு வைத்தாருக்கு நெடுமையில் நிற்பவன் ஆகிய சிவபெருமானுடைய பொலிவு பெற்ற திருவடிகள் வெல்க.

9. கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க.— தன்னை நினைத்துக் கரங்களைக் கூப்பிக் கும்பிடுவார் மனங்களை மகிழும்படிச் செய்யும் இறைவன் உடைய திருவடிகள்வெல்க.

10. * சிரம் கவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க.— தன்னை நினைத்துத் தலையைச் சாய்த்து வணங்கும் அன்பர்களைச் சிறப்புறச் செய்விக்கும் மிக்கப் புகழை உடையான் ஆகிய சிவ பெருமானின் திருவடிகள் வெல்க.

* இக்குறி யிட்ட பாடங்கள் திருத்தப் பட்டவைகள்.

இறைவன் ஆகமங்கள் வடிவாகவும், ஆசிரியர்கள் வடிவாக வும் அருள் செய்பவன் ஆதலால், ஓங்குவிக்கும் என பிறவினை வாய்பாட்டால் கூறினர். சீர்-மிகுபுகழ்; உரிச்சொல். கரம்

கூம்பவும் சிரம் கவிழவும் கூறுதலே மரபு. அம்மரபினைக் "காளை வடிவு ஒழிந்து கையுறவோடு ஐயுறவாய், நாளும் அணுகி நலியாமுன்-பாளை, அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற்கு ஆளாய்க் கவிழ்கமுகம் கூம்புக என்கை." என்ற திருஐயடிகள் காடவர் கோன் நாயனுர் அருளிய திருவெண்பாவால் அறிக. இவ்வேதுவினல்* "சிரம்குவிவார்" என்றபாடம் பொருத்தம் அன்று. சிரம் "கவிவார்-சிரம்கவிழ்வார்" என்ற பாடமே பொருத்தமும் கவிக்கருத்தும் ஆம்.

11. ஈசன் அடிபோற்றி. எந்தை அடிபோற்றி.— எல்லாப் பொருள்களையும் ஆளுபவன் ஆகிய சிவபெருமானுடைய திருவடிகள் பாதுகாத்தல் வேண்டும். யாவருக்கும் இறைவன் ஆகிய சிவபெருமானுடைய திருவடிகள் பாதுகாத்தல்வேண்டும்.

போற்றி—போற்றிய என்னும் ஈற்று, யகரவிதி திரிந்த வியங்கோள் பெயர். அது வேண்டல் பொருளைச் சுட்டிற்று. போற்றி என்ற ஏனைய ஆறு இடங்களிலும், பாதுகாத்தல் வேண்டும் எனவிரித்துக் கொள்ளுக. போற்றுதல் என்பதற்குப் பாதுகாத்தல் என்ற பொருளைச் சிலப்பதிகாரம் முதலிய பண்டைய நூற்கள் இடையே காண்க. "புலி போற்றிவாழ்" என்ற ஆசிரிய வாக்காலும் அறிக. போற்றி என்றதற்கு வணக்கம் எனப் பொருள் கொள்ளுதல் இவண் பொருத்தம் அன்று.

எந்தை என்ற மொழியைத் தலைவன் அல்லது இறைவன் என்ற பொருளில் ஆளுதல் முந்தை ஆசிரியர்கள் வழக்கு-அவ்வழக்கினைப் புறம், பெருங்கதை முதலிய பண்டைய நூற்கள் இடையே காண்க. எந்தை என்ற மொழி எமக்குத் தந்தை என்ற முறைமைப் பெயர் சுட்டும் இடத்தே(எம் + தந்தை)மரூஉ மொழியாம். அது இறைவன் அல்லது தலைவன் என்ற பொருள் சுட்டும் இடத்தே தனி(வேறு) மொழியாம். ஒருபொருளின் எஞ்சாமையைச் சுட்டும் முழு என்னும் உரிச்சொல் ஒப்ப பலகூடிய தொகைப் பொருளின் எஞ்சாமையைச் சுட்டும் எழு என்னும் உரிச்சொல் பண்டே வழக்காற்றில் அருகியது போல இறைவன் அல்லது தலைவன் என்ற பொருள்சுட்டும் "எந்தை" என்ற

தனி மொழியும் வழக்காற்றில் அருகியது போலும். அன்றி, எந்தை என்ற மொழி இறைவனைச் சுட்டும் இடத்தே எழு என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த பெயர் எனினும் ஆம். அம்மொழி ஆய்வு விரிவுபற்றி இவண் வேண்டாவாம். அடிகள் போற்றித் திருஅகவலுள் "எங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி" என்றார்கள் ஆதலால் அடிகளின் கருத்தும், "எந்தை" என்ற மொழியினுக்கு "இறைவன்" என்ற பொருள் பாலதே ஆம். (எம் + தந்தை) எந்தை என்ற மரூஉ மொழியே எந்தாய், எமக்குத் தந்தையே என விளி ஏற்று நிற்க, வேறே ஒரு எம் என்ற மொழியைக்கூட்டி எம் எந்தாய் எனல் வேண்டாவாம் அன்றோ? இவ்வேதுவினால் அவண், எம் எந்தாய் என்ற தொடர்மொழி எமக்கு இறைவனே எனப்பொருள் தருதலால், இவண் எந்தை என்ற மொழிக்கு எம் தந்தை எனப்பொருள் கூறுதல் கவிக் கருத்து அன்றாம். அம்மொழிக்கு இறைவன் அல்லது தலைவன் எனப்பொருள் கூறுதலே கவிக்கருத்து ஆகும்.

12. **தேசன் அடிபோற்றி. சிவன் சேவடிபோற்றி.**—எல்லாப் பொருள்களுக்கும் இடமாக இருப்பவன் ஆகிய சிவபெருமானுடைய திருவடிகள் போற்றி. மங்கலம் என்னும் பொருளாக உள்ளவன் ஆகிய சிவபெருமானின் செவ்விய திருவடிகள்போற்றி.

தேசன்—இடப்பொருள் உணர்த்துவதாகிய தே என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த தமிழ்ப்பெயர்.

13. **நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி.**—அன்பு என்னும் பொருள் இடத்தே நின்றவனும், இயல்பாகவே மும்மலங்களின் நீங்கினவனும் ஆகிய சிவபெருமானின் திருவடிகள் போற்றி.

"நிமலன்—வடசொல் திரிபு; மலம் இல்லாதவன்."

14. **மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி.**—வஞ்சனை தோற்றுதற்கு ஏது ஆகிய அறியாமையைத் தன் அடியார் இடத்தே சேராதபடி நீக்கும் இறைவன் உடைய திருவடிகள் போற்றி. மாயப் பிறப்பு—ஆகுபெயர்.

15. **சீரார் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி.**—மிக்கபுகழ் பொருந்திய திருப்பெருந்துறை என்னும் திருப்பதியில் எழுந்

தருளி எம்மை அடிமை கொண்ட பெருந்தகையான் உடைய திருவடிகள் போற்றி.

16. ஆராத இன்பம் அருளும் *அடிபோற்றி.—தெவிட்டாத இன்பத்தினை அளிக்கும் சிவபெருமான் உடைய திருவடிகள் போற்றி.

மேலே ஐந்து அடிகளிலும் அடிபோற்றி எனக் குறித்த திருவாதவூர் அடிகள், இந்த ஒரு அடியில்மட்டும் இயைபு இல்லாத நெறியில்* மலை அல்லது அலை போற்றி என உருவகப் படுத்தினார்கள் எனல் பொருத்தம் அன்று. அடிபோற்றி என்ற பாடமே பொருத்தமும் கவிக்கருத்தும் ஆகும்.

ஏற்பார். ஏற்கப்படுவாரை முன்னே வாழ்த்திப் பின்னே அவர் தம் வெற்றித் திறத்தினை வேண்டி (முகமன் கூறி) அதன் பின் தம் குறைகளைக் கூறுதல் மரபு. அம்மரபினைச் சிலப்பதி காரம் முதலிய பண்டைய நூற்களிடையே அறிக. அம்மரபு பற்றியே அடிகளும் இவண், ஒப்பும் உயர்வும் இல்லாத தனிப் பெரும் வள்ளல் ஆகிய சிவபெருமானின் திருமுன்னே தம் குறையைக் கூறுவான் முன் ஐந்து அடிகளால் வாழ்த்துக் கூறிப் பின் ஐந்து அடிகளால் வெற்றித் திறம்வேண்டி (முகமன் கூறி) அதன்பின் ஆறு அடிகளால் தம் பாதுகாப்பை வேண்டினார்கள். அடிகள் தம் பாதுகாப்பாவது தாம் கூறும் குறையைக் கேட்டருளவேண்டும் என்பதாம். அவர் தம் குறையாவது இப் பாவின் ஈற்றில் (அடி 86ல்) குறிக்கப்பட்ட "அல்லல் பிறவி அறுப்பாய்" என்பதாம்.

17. சிவனவனென் சிந்தையு ணின்றவதனால் (18) அவனரு ளாலே அவன்றாள் வணங்கி (சிவனவன் அவன் அருளாலே என் சிந்தை உள் நின்ற அதனால் அவன் தாள் வணங்கி)—இறைவன் தன் பேர் அருளாலே என்னுடைய மனத்திடத்தே நின்றான். அதனால் அந்த இறைவன் உடைய திருவடிகளை வணங்கி,

சிவனவன்—இருபெயர் ஒட்டு.

18. சிந்தை மகிழச்*சிவபுராணன் தன்னை (20) *உந்தை வினைமுழுதமோய உரைப்பனி யான் (உந்தை வினைமுழுதும் ஓய

**சிந்தை மகிழ்அச் சிவபுராணன் தன்னை யான் உரைப்பன்)**—என்னுடைய பண்டைய தீய வினைகள் முற்றும் கெடும் பொருட்டு என் மனத்தினை விரும்பிய அந்தச் சிவபெருமான் ஆகிய பழமையானின் திருமுன்னே யான் என்னுடைய குறையினை உரைப்பன்.

உந்தை—முந்தை; விகாரம். * முந்தை என்ற பாடம் மோனைத் தொடையால் முரண் ஆகின்றது. ஆதலால், அம் முந்தை என்ற பாடம் பொருத்தம் அன்று. உந்தை என்ற பாடமே பொருத்தமும் கவிக்கருத்தும் ஆகும். அகரம்-அவன் அருளாலே நின்ற சிவபெருமானைச் சுட்டிற்று. சிவபுராணன்-இருபெயர் ஒட்டு-தன் சாரியை. ஐ-உருபு மயக்கம்.* சிவ புராணம் என்ற பாடத்திற்கு ஏற்ப இப்பாவில் முற்றும் இறைவன் உடைய நடக்கை (சரிதை) ஆகிய திருவிளை ஆடல்களைக் குறித்துக்கூறுமல் அவனுடைய இயற்கைச் சிறப்பினைச் சுட்டும் திருப்பெயர்களையே மிகுத்துக் கூறியபடியால் * சிவ புராணம் என்ற பாடம் பொருத்தம் அன்று. பொருள் இயைபும் இன்று. ஆதலால் சிவபுராணன் என்ற பாடமே பொருத்தமும் கவிக்கருத்தும் ஆகும்.

பதினேழு முதல் இருபதுவரை உள்ள அடிகள் நான்கின் பொருள், திருவாதவூர் அடிகள், தம் மனத்தே நினைத்த நினைவு ஆகும். இந்நான்கு அடிகளும் முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்ற நிரலில் நிற்றற்கு உரியனவாம். கொண்டு கூட்டல் ஆகவும் கொள்ளல் ஆம்.

21. **கண் நுதலான்! தன் கருணைக் கண் காட்ட * வந்தோ ஓய்!**—கண்ணை நெற்றியில் உடையானே! நின்னுடைய கருணையின் பெருமையை எனக்கும் காட்டும் பொருட்டுத் திருப்பெருந்துறை என்ற திருப்பதியில் குருந்த மரத்தின் கீழ் வந்தவனே!

தன்—நின்தன்; விகாரம். காட்ட—உலகினுக்குக் காட்ட எனினும் ஆம்.* வந்தெய்தி எனப் பாடம் கொள்ளின், எய்தி என்ற வினை எச்சம் சென்று முடிதற்கு ஏற்ற வினை இயைபு இன்மையால், அப்பாடம் பொருத்தம் அன்று. வந்தோ ஓய்! என விளிப்பெயர் ஆகப்பாடம் கொள்ளுதலே பொருத்தமும்

கவிக் கருத்தும் ஆகும். மதுரைத் திருப்பதியில் குதிரைச் சாத்தனாய் வந்தவனே எனினும், மண் சுமத்தற்குக் கூலி ஆளனாய் வந்தவனே எனினும் பொருந்தும்.

இவ்வகை அன்றி "நெற்றிக் கண்ணை உடைய இறைவன் தனது அருள் கண் காட்ட அவன் திரு முன்பு அடைந்து" என்று உரைத்தல் பொருத்தம் அன்று. அதன் ஏது மேல்வருமாறு—அடைந்தவன் இறைவன் ஆயின் யார் முன்பு அடைந்தான் என்பதும், அடையப்பட்டவன் இறைவன் ஆயின் அடைந்தவன் யார் என்பதும் விளங்காமல் ஐயம் தருதலால், அவ்வுரை மயங்கக் கூறப்பட்டதும், அடைந்து என்ற வினை எச்சம் சென்று முடிதற்கு உரிய வினை இயைபினைக் காட்டாமையால் பொருத்தம் அற்றதும் ஆம்.

23. **விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய் விளங்கு ஒளியாய்!**—விண் இடம் முற்றும் நிறைந்தும், மண் இடம் முற்றும் நிறைந்தும், மிகுதி ஆகித் திகழ்கின்ற ஒளியாய் இருப்பவனே!

24. **எண் இறந்த எல்லை இலாதானே! நின் பெருஞ்சீர்.**—இத்தனைச் சூரியனின் ஒளியை உடையவன் என எண்ணும் எண்ணத்தினைக் கடந்தவனும், இத்தனை நிலத்தின் பரப்பை உடையவன் எனக் கூறும் எல்லையை இல்லாதவனும் ஆகி நிற்பவனே! நின்னுடைய பெருமை பொருந்திய மிக்கப் புகழை உடையனவும்,

இருபத்து மூன்று இருபத்து நான்கு ஆகிய இவ்விரண்டு அடிகளும், முறையே இருபத்திரண்டு, இருபத்து மூன்றாவது அடிகளாக நிற்றற்கு உரியனவாம். கொண்டு கூட்டல் ஆகவும் கொள்ளல் ஆம்.

22. **எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி.**—இத்துணைப் பெருமை உடையன என நினைத்தற்கு இயலாத அழகு பொருந்தியனவும், ஆகிய திருவடிகளை வணங்கி,

இவ்வடி இருபத்து நான்காவது ஆக நிற்றற்கு உரியது ஆம். கொண்டு கூட்டல் ஆகவும் கொள்ளல் ஆம். இறைஞ்சி என்ற

வினை எச்சத்தினை 25ல் புகழும் என்ற பெயர் எச்சத்தின் புகழ்த லொடு முடிக்க.

25. போல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்.— தீயவினையை உடையவனும், நின்னைப் புகழும் வழியைச்சிறிதும் அறியாதவனும் ஆகிய யான்,

26. புல் ஆகி பூடு ஆய் புழு ஆய் மரம் ஆகி (27) பல் விருகம் ஆகி பறவை ஆய் பாம்பு ஆகி.—பலவகைப் புல்லுகள் ஆகியும், பலவகைப் பூடுகள் ஆகியும், பலவகைப் புழுக்கள் ஆகியும், பல வகை மரங்கள் ஆகியும், பலவகை மிருகங்கள் ஆகியும், பல வகைப் பறவைகள் ஆகியும், பலவகைப் பாம்புகள் ஆகியும்,

பல் என்னும் சொல்லை எல்லாவிடத்தும் கூட்டுக.

"கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்கள் ஆய்" என்ற இவ்வடி இவண் இடைச்செருகல் ஆம். அதன் ஏது மேல் வரு மாறு—கல் என்பது மண்ணின் திரிந்த வலிய பகுதிகளுள் ஒன்று; அது என்றும் தனித்தேயும், கிளைத்தேயும் வளர்வதும் இல்லை. படர்ந்து பூத்துக் காய்த்துப் பரவுவதும் இல்லை. முட்டை இட்டேயும், குட்டி இட்டேயும் பெருகுவதும் இல்லை. ஆதலால் திருவாதவூர் அடிகள், "கல்லாய்ப் பிறந்தேன்" என் றூர்கள் எனல் பொருத்தம் அன்று. அடுத்தகீழ் அடியில் உள்ள "முனிவராய்" என்ற பாடம் "மனிதராய்" என்று இருக்கத் தக்கது. அவ்வடியில் "மனிதராய்" என்ற பாடம் இல்லையானல் மோனைத் தொடையால் முரண் ஆகின்றது. அன்றிப் பொருட் பொலிவும் இல்லாகின்றது. இக் "கல்லாய் மனிதராய்" என்ற இடைச் செருகல் அடியில் சீர் நிரைத்தல் பொருட்டு "மனித ராய்" என்ற சொல்லைவைத்து அடுத்த அடியில் நின்ற "மனித ராய்" என்ற பாடத்தினை "முனிவராய்" எனத் திரித்தனர் போலும். அன்றி, இடைச்செருகல் ஆகிய இவ்வடியில் சமண சமயத்தவர் கொள்கைக்கு உரிய "கல்லாய் மணலதாய் (மண் ணாய்) என்ற பாடம் இருந்து அப்பாடத்தினைக் "கல்லாய் மனித ராய்" எனத் திரித்து அத்திரிபுக்கு ஏற்ப அடுத்த கீழ் அடியில்

"மனிதராய்" என நின்ற பாடத்தினை "முனிவராய்" எனத் திரித்து இருத்தலும் கூடும்.

பேய் என்பது-பிறந்து, இருந்து, இறக்கும் ஒருவகைப் பிறப்பு இனத்தது அல்லை. அது மக்களுள் சிலர், தீவினை ஏதுவினால் அல்லது விழுமியோர் வைவினால் வினை முதிரா முன் இறந்து வினை விளையும்வரை நுண்ணிய உடலொடு உழலும் மக்களின் உயிரே என்பர் உயிர்ப்பண்பு உணர்ந்த உரவோர். அத்தகைய பேய்களுள் சில தான் பரணி பாடுபவர்களால் பாராட்டப் படுவனவும், முனிவர்கட்கு ஏவல் செய்வனவும் ஆம் இவ் வேதுவினால் திருவாதவூர் அடிகள், பேயாய்ப் பிறந்தேன். என்றார்கள் எனல் பொருத்தம் அன்று. ஆதலால் "கல்லாய் மனிதராய்" என்ற இவ்வடி இடைச் செருகல் என அறிக.

கணங்கள் + என்பதில்—கள்—சாரியை. கணம் என்பது ஒரு பொருள் அல்லை. அது பல கூடிய குழுவின் பெயர். அப் பெயர்—வடசொல் திரிபு. பூதகணம் எனின் பூதங்கள் கூட்டம் என்பது பொருள். அப்படிக் கூறுங்கால் கணம் என்ற மொழிக் குத் தலைக் குறை விகாரம் என்று பெயர் ஆம். இவ்விலக்கணம் பேய்க்கணம் எனப் பொருள் கொள்ளும் இடத்தும், (பிற விடத்தும்) பொருந்தும். அப்பூதங்கள் மக்களுள் நல்வினைப் பெருக்கால் சிறந்த சிலரே சிவ சக்திகளால் தங்கள் திருமுன் வாழும்படி அருள் செய்யப்பட்டவர்கள் ஆவார்கள். ஆதலால், கணங்கள் என்பதும், பிறந்து, இருந்து இறக்கும் ஒருவகை உயிர் இனத்தது அல்லை. இவ் வேதுக்களினால் திருவாதவூர் அடிகள், கணங்களாய்ப் பிறந்தேன் என்றார்கள் எனல் பொருத்தம் அன்று. இத்தகைய ஏதுக்களினாலும், எதுகைக்கு ஏற்ப துணையடி ஒன்று இன்றித் தனித்து நிற்றலாலும், பொருட் பொலிவு இன்மை யாலும், லகர எதுகை அடிகள் ஏழனுள்ளும் "கல்லாய் மனித ராய்" என்ற இவ்வடியே இடைச் செருகல் எனக் கழித்தற்கு உரியதாம்.

(தொடரும்.)

உ

# ஒரு போலியுரை மறுப்பு

திரு. அ. கந்தசாமி பிள்ளையவர்கள்,
(ஒரு தமிழ் மாணவன்.)

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்றும் வெளி வருவதாகிய (1) செந்தமிழ்ப் பத்திரிகையிற் சிலமாதங்கட்கு முன் 'திருவள்ளுவர்காலம்' என்ற தலைப்போடு ஒருகட்டுரை வெளிவந்துள்ளது. ஆசிரியர் வள்ளுவனார் காலம் நிறுவப்படு மாற்றை யறிவான் பேராவலோடும் அதனைப் படித்துப் பார்த்தேன். ஏறேறக் குறைய இருபத்தெட்டுப் பக்கங்களிற் சுற்றிச் செல்லும் அவ்வுரை கடைசியாகத் "திருவள்ளுவர் காலத்தாற் பிற்பட்டவர்" என்ற ஓர் அரிய முடிபைப் பல இடர்ப் பாட்டோடு துணிகின்றது. கி. மு. அல்லது கி. பி. இன்ன நூற்றாண்டென்றேனும், இன்ன அரசர்காலத்தவரென்றேனும்அறுதியிடுதற்குரிய வழிகள் தற்காலம் பல இருக்கவும் அவற்றிலெல்லாம்புகாது மேலெழுந்தவாரியாக முடிவது இக்கட்டுரை.

இதனை யுற்றுநோக்கின், இஃது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. சோமசுந்தர பாரதியாரவர்க ளெழுதிய (தொகுதி 33, பகுதி. 3.) ஒரு நூலினை முற்றிலும் மறுப்பதாகவுள்ளதே யன்றித் தான் மேற்கொண்ட பொருளிற் செல்லுவதாகக் காணப் படவில்லை. கட்டுரைகாரர் நடுவுநிலை தவறாதவர்; ஆங்கிலப்புலவர் எனலை அவர் தம் பெயரில் (ஆர். நரசிம்ஹன். பீ. ஏ. ஹானர்ஸ்)உள்ள எழுத்துக்களறிவிக்கின்றன.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பத்திரிகையில் வெளிவந்துள்ள கட்டுரை யொன்றில் மாணவர் மருளா வண்ணம் தெருட்டும் நோக்கத்துடனே இம் மறுப்புரை எழுதப்படுகின்றது.

அப்போலியுரை (1) மணிமேகலையும்—திருவள்ளுவரும் (2) தொல்காப்பியரும்—திருவள்ளுவரும், (3)சங்கநூற்களும்—திரு

வள்ளுவரும், (4) வடநூலாரும்—திருவள்ளுவரும், (5) பரிமேலழகரும்—திருவள்ளுவரும் என ஐந்து பிரிவாக்கி ஒவ்வொரு பொருளிலும் அவர் கூறும் பொருள்களை ஆராய்ந்து உண்மை காண்பாம்.

**(1) மணிமேகலையும்-திருவள்ளுவரும்.** ஐம்பெருங்காப்பியங்களிலொன்றாகியதும், சிலப்பதிகாரத்தோ டியைபுடையதுமாகிய மணிமேகலையுள் அதன் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்—

என 22ஆம் காதையில் (அடிகள் 59—61) திருக்குறளையும் திருவள்ளுவரையும் பாராட்டியிருப்பது மலையிலக்கு. இதனானே திருக்குறள் 1800 ஆண்டுகட்கு முற்பட்டதென்பதும் போதரும். இதனை நமது கட்டுரைகாரர் மறுத்துத் தமது கொள்கையினை நாட்டலுறுவான் கூறுவன.—

1. மணிமேகலையே பிற்காலத்து நூல்.

2. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் மணிமேகலையை 5ஆம் நூற்றாண்டினதாகக் கருதுகின்றனர்.

3. சாத்தனார் கூறும் "பொய்யில் புலவன்" என்ற தொடர் திருவள்ளுவரைக் குறிக்காது.

4. அத்தொடர் (பொய்யில் புலவன்) திருத் தொண்டத் தொகையில்வரும் "பொய்யடிமையில்லாத புலவ"ரையே குறிக்கும்—என்பன.

இவற்றிற்கு அவர் காட்டும் சான்றுகளும் அவற்றின் மறுப்பும் இங்குக் காண்க.—

**கட்டுரை (1)** :—மணிமேகலையுள் வரும் "குச்சரக்குடிகை" என்றதொடர் கொண்டு அந்நூல்5ம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தகும். என்பது.

மறுப்பு:—மணிமேகலை18ஆம் காதையுள் "குச்சரக்குடிகை தன்னகம் புக்காங்கு" எனவும் "குச்சரக்குடிகைக் குமரியை

மரீஇ'' எனவும் வரும்-145, 152 அடிகளிலுள்ள **கூர்ச்சரக்குடிகை** என்ற தொடருக்குக் 'கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறிய கோயில்' என்பது பொருள். கட்டுரைகாரர் இதுபற்றியொன்றும் கூறிற்றிலர். இந்திய சரித்திரத்திலிருந்து கூர்ச்சரரைப் பற்றி அறியத்தகும் செய்திகள்;

'கூர்ச்சரர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். இவர்கள் முதலில் பஞ்சாபில் குடியேறினர். எனினும் இவர்களைப் பற்றிய விரிவான செய்திகளெல்லாம் இவர்கள் இராஜபுதனத்திற்கு வந்த பின்பு தான் தெரிய வருகின்றன. குஜ்ராத்(குச்சரம்)என்ற நாடு இவர்களுடையதே. ஹூணர் என்னும் தொகுதியினர் கூறப்படுமிடத்தெல்லாம் கூர்ச்சரரும் சேர்த்தே கூறப்படுகின்றனர். கி. பி. 455—70ஆம் ஆண்டினராகிய ஸ்கந்தகுப்தன் என்ற அரசனது கல்வெட்டுக்களில் ஹூணர்களுடன் கூர்ச்சரர் கூறப்படாமையின் இவர்கள் அக்காலத்துக்குப்பிற்பட்டவராகல் வேண்டும்.......'என்பன.

இச்செய்திகளை யுட்கொண்டே நமது கட்டுரைகாரர் மணிமேகலையை5ஆம் நூற்றாண்டினதாகக் கொண்டனர் போலும். கல்வெட்டுத் தோன்றுவதற்கு முன் ஒரு கூட்டத்தார் உலகில் இல்லையென்றேனும், நாகரிகம் பெறவில்லையென்றேனும் உரைப்பது பொருந்தாது. எங்ஙனமெனின், சோழர்களைப் பற்றிய செய்திகள் கி. பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்தும், பாண்டியரைப் பற்றிய செய்திகள் கி. பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்தும், தான் கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன. அதனால் சோழ, பாண்டிய அரசர்கள் அதற்குமுன் தமிழ் நாட்டிலிருந்திலரென்றேனும், நாகரிக முற்றிலரென்றேனும் உரைப்பது பொருந்துமா? புறநானூறு முதலிய பழைய நூல்களில் அவர்களின் செங்கோன்மை முதலிய நாகரிகங்கள் வெள்ளிடை மலையாக வன்றோ விளங்குகின்றன. அதுபோலவே, கூர்ச்சரரும் கல்வெட்டுத் தோன்றுவதன் முன் பல நூற்றாண்டுகட்கு முந்தியே சிறந்திருந்தனரென்பதில் இடர்பாடு யாதுமின்றாம்.

அன்றியும், ஒருகொள்கை வேறொருவகையால் நன்கு நாட்டப்பெற்று நிலவும்போது, அவ்வழியால் ஆய்ந்து அதனோடு

மாறுபட்ட போலிக்கொள்கைகளை யொதுக்குதலும் முறையே யாம். ஆதலின், இற்றைக்கு1800 ஆண்டுகட்கு முற்பட்டதென்று நாட்டப்படும் மணிமேகலையின் ஆதாரங்கொண்டு அதிற்குறிக் கப்படும் கூர்ச்சரரும் அதற்கு முந்தியவரே யென்க.

இராமாயணம், பாரதம் முதலிய வடமொழி நூல்களிற் றமிழர் செய்தி யறியப்படல்போலவே, சிலப்பதிகாரம் மணி மேகலை முதலிய தமிழ்நூல்களில் வடநாட்டினர் செய்தியறியப் படலும் இயல்பே. அக்காலத்துச், சிற்பத்தொழிலிற் சிறந்த கூர்ச்சரநாட்டினரும் இங்கு வந்து தொழில்செய்து பிழைத் தனர். இவரையொப்பவே, மகதவினைஞர், மராடக்கம்மர், அவந்திக் கொல்லர், யவனத்தச்சர்-முதலிய பிறநாட்டினருக்கும் ஏற்றதொழிலீந்து தமிழவரசர் புரந்துவந்தமை நமது நூல், களால் அறியக் கிடக்கும் செய்தியாம்.

இதனல், 'குச்சரக் குடிகை' என்ற தொடர்கொண்டு மணி மேகலை பிற்காலத்ததெனல் பொருந்தாமை காண்க.

**கட்டுரை (2):**—டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்கள் மணிமேகலையை 5-ஆம் நூற்றூண்டினதாகக் கருதுகின்றனர் என்பது.

மறுப்பு:— தமிழ்த்தாயின் அருந்தவச் செல்வராகிய உயர் திரு. ஐயரவர்களைப் பின் பற்றுவதாகக் கட்டுரைகாரர் கூறுவது வியப்பைத் தருகின்றது. மூன்றும் பதிப்பாக அணிமையில் வெளிவந்துள்ள மணிமேகலையின் முன்னுரையாலும், சிலப்பதி காரம் மூன்றும்பதிப்பின் முன்னுரையாலும் இவை1800ஆண்டு கட்கு முந்தியவையென்று அவர்கள் அங்கைநெல்லியென விளக்கி யுள்ளார்கள். கட்டுரைகாரர் போன்று வாளா கூறுது, கயவாகு என்னும் இலங்கையரசிருவருள் முதற்கயவாகுவின் காலத்தது சிலப்பதிகாரம்; சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒருகாலத்தன. என ஆதாரத்துடன், அவர்கள் விளக்கியிருக்கவும் அதற்கு மாறுகக் கட்டுரைகாரர் கூறுவது பொருந்தாது.

**கட்டுரை (3):** சாத்தனார் கூறும் "பொய்யில் புலவன்" என்றதொடர் திருவள்ளுவரைக் குறிக்காது; திருவள்ளுவ மாலையில் அங்ஙனங் கூறப்படாமையால். என்பது.

மறுப்பு:-இதற்குநாம் பிறிதொரு சான்றுதேடல்வேண்டா. நமது கட்டுரைகாரர் கூற்றேசாலும். அவர்திரு வள்ளுவமாலை யைப்பற்றிக் கூறும் பிறிதோரிடத்தில்(செந்தமிழத்தொகுதி33. பகுதி. 3. பக்கம் 87. வரிகள் 26-8) "எந்தக் கொள்கையை நிலை நிறுத்தவும் திருவள்ளுவமாலையிற் கூறியவை ஆதாரங்களாகா" என்று கூறியிருத்தலானே, அவர்கூறும் ஏதுப் பொருந்தாமை யும், உயர்திரு ஐயரவர்கள் மணிமேகலையில் "பொய்யில்புலவன்" என்றது திருவள்ளுவரை யெனத் தெளிந்து கூறுதலானே, அவர் கொள்கை பொருந்தாமையும் காண்க.

**கட்டுரை (4) :**—"பொய்யில் புலவன்" என்பது "பொய் யடிமை யில்லாத புலவர்" என்னுந் திருத்தொண்டத் தொகை யடியாரையே குறிக்கும். அவர் நக்கீரர் முதலியோர். அவர் களாற் பாடப் பட்டுக் கடல் கோட்பட்ட நூல்களில் யாதானும் ஒரு நூலின் செய்யுளே "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்றகுறளும் என்பது.

மறுப்பு:—"தெய்வந் தொழாஅள்.......மழை" என்னுங் குறட்பா, திருக்குறளில் உண்மை கைக்கு மெய்யாக யாவரும் அறியப்படுவது. ஆதலின் "பொய்யில் புலவன்" என்ற தொடரும் திருவள்ளுவரையே குறிக்குமென்பதும் மாறுபாடில் லாத முடிபேயாம்.

உண்மையினைத்தாகவும், இதற்குமாறாகக் காண்டல் விரோ தங் கூறும் இவர் கூற்றுக்குமாருக யாமும்,—இக்கட்டுரையாள ரைச் சுட்டி, "இவர் உண்மையான நரசிங்கரல்லர்; அவர் வேறு; இவர் ஒரு போலியாள்; அவரிங்கில்லை" என விதண்டை கூறல் வேண்டா. தமிழ்ப் பேராசிரியராகிய உயர்திரு ஐயரவர்கள் அணிமையில் வெளியிட்ட திருவள்ளுவரும்—திருக்குறளும் என் னும் சிறு நூலிலும், மணிமேகலையென்னும் பெருங்காப்பியத் திலும், சாத்தனாராண்ட "தெய்வந் தொழாஅள்" என்னுஞ்

செய்யுள் திருக்குறளினதே; அவர்குறித்த "பொய்யில் புலவன்" திருவள்ளுவரே என நன்கு விளக்கியிருத்தல் கொண்டு இத னுண்மை காணத் தகுவதாம்.

திருக்குறளைப் பிற்படுத்த எண்ணி அதற்குறுதுணையாக மணிமேகலையைப் பிற்படுத்தவரும் நமது கட்டுரைகாரர் தாமே, மயங்கி **"மணிமேகலை முதலிய பழங்காப்பியங்கள்"** எனப் பிறி தோரிடத்தில் (செந்தமிழ்த் தொகுதி 33. பகுதி 8. பக்கம் 214. வரி 31.) கூறுகின்றனர்.

இன்னும் இக்கட்டுரைகாரர் தம்ஆராய்ச்சிமுறை பெருவியப் பிற்றுகவே யுள்ளது.—மணிமேகலை பிற்காலத்த தெனின் அதனுல் ஆளப்பட்ட திருக்குறளும் பிற்காலத்த தெனல் எங்ஙனம் பொருந்தும்? இற்றைப் புலவரொருவர் தமது நூலில் திருக்குறளை யாள்வரெனின், அதுகொண்டு திருக்குறள் நேற் றைய நூலெனல் பொருந்துமா?

இவற்றுல் ஆர். நரசிம்ஹன் பீ. ஏ. ஹானர்ஸ் என்னும் ஆங் கிலப் புலமையாளர், திருக்குறள் பிற்காலத்தது எனக்கொண்ட கொள்கையும், அதற்கு மணிமேகலையைத் துணைதேடிக் காட்டும் சான்றுகள் நான்கும், அவர்கூற்றுனும், பிறர் கூற்றுனும் பொருந் தாமை பெற்றும்.

மிகுதுன்புற்று இவர் இங்ஙனம் கூறியதெல்லாம் எக்கருத் துப்பற்றியோவென நாம் ஐயுறுவகை, இவரே பிறிதோறிடத்து (செந்தமிழ்தொகுதி, 33 பகுதி, 8 பக்கம், 220 வரிகள்) "மற்று மொரு சாரார் தமிழ்ப்புலவர் பல(வ)ரை எவ்வாற்றுனும்.......... பிற்பட்டவராக்க வேண்டுமென்ற நோக்கத்துடனே காலத்தை பாராய்கின்றனர்" எனக் கூறுவதே நமக்குத் தேற்றந் தரும்.

இனி இவர் கூற்றுப் பிறவற்றையும் முறையேஆராய்வாம்.

# நன்னனும் பாரனும்

திரு. வித்துவான். ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை திருவத்திபுரம்.

நன்னன் என்பவன் சேரன் செங்குட்டுவன் காலத்துக்குச் சிறிது பிற்காலத்தில் சேரநாட்டு ஒரு பகுதியில் இருந்து அரசு புரிந்த குறுநில மன்னன். இவன் வேளிர் குலத்தில் தோன்றியவன்; இவனுடைய பெற்றோர் வரலாறு ஒன்றும் தெரிந்திலது.

இவனுடைய நாடு கொண்கான நாடு என்று கூறப்படுகின்றது. இதுவே பின்னர், கொங்கணநாடென்றும், கொங்கு நாடென்றும் மருவி வழங்கிவரலாயிற்றென்று கூறுப. இதனுடைய பரப்பு, இக்காலமுறைப்படி, மைசூர் நாட்டின் தென்பகுதியும், சேலம் கோயம்புத்தூர் ஆகிய நாடுகளும், நீலகிரி மேலகிரி முதலிய கிழக்குமலைத்தொடரின் பகுதியும் கொண்டிருந்தது. இந் நாட்டின்கண் பாரம், பிரம்பு, வியலூர், பாழி என்னும் சிறந்த நகரங்களும், பாழி, ஏழில் முதலிய மலைகளும் இருந்தன. இந் நாட்டின்கண் கொண்கானம் என்னும் சிறந்த மலையிருந்தமையின், அதனைச் சூழ்ந்த இந் நாடும் கொண்கான நாடு எனப்படலாயிற்று. இந் நாட்டின்கண் பொன்மிகுதியாகக் கிடைக்கும்.

மேற்கூறிய நகரங்களுள் பாரம் என்பது இவனுக்கே உரித்தாயினும் நாட்டின் பரப்புடைமையும், ஆட்சியருமையுடைமையும் குறித்து, மிஞிலி என்னும் வீரன் ஒருவன் ஆட்சியின்கீழ், இருந்தது. பாழி என்னும் நகரம், பாழியென்னும் மலையடியிலிருந்த பேரூர்; இதன்கண், நன்னன் தான் ஈட்டிய பொருளை வேளிர் பலர் காவல்செய்ய வைத்திருந்தான். இது தேன்வளம் சிறந்தது.

நன்னன், பலரைப் புறங் கண்டு அவர் அருங்கலம் கொணர்ந்து பாழிக்கண் தொகுத்து வைத்தமையேயன்றி, "இடனின்றி இரந்தோர்க்கு இல்லென்றல் இழி" வெனக் கருதி வரையாது வீசும் வள்ளன்மையும், புலவர் பாடும் புகழும் படைத்தவன். இவன் காலத்தில் "நாண்மங்கலம்" என்னும் பிறந்தநாட் கொண்டாட்டம் நிகழ்ந்தது.

இவன் ஒருகால் கொண்ட வஞ்சினம், தொழிலால் முற்றுப் பெறுங்காறும், அது தணியான் எனப் பெறப்படுவது அவன் போர்ச் செயல்களால் அறியலாம். இவன் காலத்தில் பிண்டன், அதிகன் என்பார் மிக மெய்வலி படைத்திருந்தனர். இவருள் அதிகன் என்பவன், பாண்டியன் ஆணைக்கீழ் நிற்கும் குறுநில மன்னன். ஆகவே, அவன் அதிகன்பசும்பூண்பாண்டியன் என வழங்கப் பெறுவானுயினன். இவன் போர்த்தொழிலில் மிக்க வன்மை யுடையவன்; நல்லிசை தரும் இரவலர்க்குப் பெரும் பொருள் அளித்து அழியாப் புகழ் பெற்றவன்; வில்லேந்திய படைவீரர் பலர் கொண்டவன். நன்னன் இவ் விருவரையும் வென்று பெரும்பொருள் கொண்டதோடமையாது, அப் பொருள்களை அவர்நாட்டு யானைமீ தேற்றி, அவர்தம் மகளிர் கூந்தலால் கயிறு திரித்துப் பிணித்துக் கொணர்ந்து தனது பாழிநகரின்கண் வேளிர் காப்ப வைத்தனன்.

நன்னன் சென்ற விடங்களிலெல்லாம் தன் வென்றியே விளங்கச் செய்தற்குத் துணையாக எற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை, கணையன் எனப் பல வீரர் இருந்தனர். இவருள் கட்டி யென்பான் சிறந்த வீரனல்லன்; இவன் தித்தன் வெளியன் என்பானேடு போர்செய்யத் தொடங்கிச் சென்றவன், அவனுடைய அவைக்களத்து எழும் கிணையோசை கேட்டு அஞ்சியோடினுன். ஒருகால், நன்னன், இவர்தம் துணையுடன், பெரும்பூண்சென்னியோடு போர்செய்யச் சென்று, அவனுடைய படைவீரனுகிய பழையனைக் கொல்ல, அதனுற் சினம் சிறந்து பெரும் போருடற்றிய சென்னிக்குப் புறந்தந்து ஓடினன்.

நன்னன் படைவீரருள் மிஞிலி யென்பவன் சிறந்த வீரன்; நன்னன் புகழ்க்கு முதற்காரண மாகியோன் இம் மிஞிலியே

எனக் கோடல் வேண்டும். இவன் அன்னி யென்னும் வீர னுக்கு மகன். இந்த அன்னி, அக்காலத்தில் பெரும் வலிச் சிறப்புடையனு யிருந்த திதியன் என்பவனுடைய காவல்மரத் தைத் தடிந்து, வேள்எவ்வி என்பவன் கூறிய நல்லுரையையும் கேளாது, அவன் சினத்திற் காளாகிப் பின் அவனேடு போர் செய்து, குறுக்கை யென்னுமிடத்துப் புறந்தந்து வீழ்ந்தனன். பின்னர் அவ் வன்னி, கோசர்களோடு பொருது தோல்வியுற அவர் அவன் கண்களைக்களைந்து அழித்தனர். இச்செய்தியால் ஆறுச் சினமுற் றிருந்த மிஞிலியை நன்னன் தன் படைத்தலைவ னுகக்கொண்டு, அக்கோசர்களை வென்றழித்து, வாகைசூடினன், திதியன் இறந்தபின், மிஞிலி அவனுடைய அழுந்தூரின்கண் சிறப்புடன் உலாவினன்.

அக்காலத்தில், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் சேரவேந்தனுக்கு ஆய்எயினன் என்னும் படைத் தலைவன் ஒருவனிருந்தனன். இச் சேரனுக்கும், நன்னனுக்கும் எக்காரணத்தாலோ பகைமையுண்டாக, எயினன் மிஞிலியோடு போர் செய்யத் தொடங்கினுன். எயினனுக்குப் பலர் மிஞிலியின் வலியுடைமை விளங்கக் கூறியும் எயினன் கொள்ளாது போர் செய்து ஒழிந்தான். இதனு லுண்டான சினம் நார்முடிச் சேர லுக்கு விரைவில் அடங்கிற்றன்று; சேரனுக்கும் நன்னனுக்கும் கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறை என்னும் இரண் டிடங்களில் போர் நிகழ்ந்தன. இவற்றுள், வாகைப் பெருந் துறைப் போர்க்கண்ணே, நன்னன் பெரும்போர் செய்து தன் னுடிழந்து ஆவியு மிழந்தான்.

இது நிகழ்ந்த சிறிது காலத்துக்கு முன்னர், பெண்கொலை ஒன்று புரிந்து தீராப் பழியும் பெற்றுன். குணம் குற்றம் இரண்டினுள் ஒன்றே யுடையார் உலகத் திலரன்றே! பெண் ணெருத்தி நீராடச் சென்றவள், நீர்க்கண் மிதந்து போந்த இவனுக்குரிய முற்றுத பழம் ஒன்றைத் தின்றெழிந் தாளாக அது பொருத இவன், அவள் தந்தை எண்பத்தொரு களிறு களையும், அவள் நிறை பொன்செய் பாவை கொடுப்பவும் கொள் ளாது, அவளைக் கொலையே புரிந்தழிந்தான். இவன் ஒருகால்,

ஔவையார் தன்னைப் பாடி வந்தமை யறிந்து அவர் வரிசை யறிந்து பரிசில் நல்கா தொழிய, அவர் இவனை வெறுத்துப் பாடினர்.

இனி, இவனது வரலாறு அறிதற்குப் பேருதவியா யிருந்த ஆசிரியர் பரணர் பாடல்களை ஒவ்வொன்றாக ஆராய்வாம். இவற்றுள் அகநானூற்றில் உள்ளனவற்றுள் பலவற்றிற்கு உரையின்மையின், உரையும் ஈண்டுக் கூறுகின்றேம். பிழை படுவன வற்றைத் தெரிக்குமாறு பெரியோர்களை வேண்டுகின்றேம்.

ஆசிரியர் பரணர் அகநானூற்றில் தாம் பாடிய முப்பத்து நான்குபாட்டுக்களுள் நன்னன் வரலாற்றுக்கியையப் பதினொன்கு பாட்டுக்கள் பாடியுள்ளார். அவற்றுள், இவன் திந்தன், பிண்டன் முதலியோரை வென்ற செய்தியும், ஆஅய் பிரம்பு என்னும் பேரூர் இவனுக்கே உரித்தென்பதும் பிறவுமாகிய செய்திகளோடு பெரும்பாலனவற்றுள் மிஞிலியின் போர்ச்செயலின் நலங்களையும் விளக்கிச் செல்கின்றார். ஏனைக் குறுந்தொகை, நற்றிணை முதலிய தொகை நூல்களுள், நன்னன் கோசரைவென்றமையும், பெண்கொலை புரிந்தமையும், பிண்டன் முதலியோரை வென்று அவர்தம் பொருள்களை மகளிர் கூந்தலாற் றிரித்த கயிற்றாற் கட்டிக் கொணர்ந்தமையும் பிறவும் கூறுகின்றார்.

இனி, நன்னன், திந்தன், பிண்டன் முதலியோரை வென்ற செய்தி கூறும் பாட்டு,

"நெஞ்சுநடுக் கரும்படர் தீர வந்து
குன்றுழை நண்ணிய சீறூர் ஆங்கண்
செலீஇய பெயர்வோள் வணர்சுரி யைம்பால்
நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேரிசைச்
சினங்கெழு தானைத் தித்தன் வெளியன்
இரங்குநீர்ப் பரப்பிற் கானலம் பெருந்துறைத்
தனந்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெள் ளிறவின் குப்பை யன்ன
வுறுபகை தரூஉம் மொய்ம்மூசு பிண்டன்

உண்முர ணுடையக் கடந்த வென்வேல்
இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவ னார நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயிற் கலாவத் தன்ன தோளே
வல்வில் இளையர் பெருமகன் நள்ளி
சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்த ளுள்ளும் பலவுடன்
இறும்பூது கஞலிய வாய்மலர் நாறி
வல்லினும் வல்லா ராயினும் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
மாஅல் யானை யாஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்
வேயமைக் கண்ணிடை புரைஇச்
சேய வாயினும் நடுங்குதுயர் தருமே.'' என்பது.

இதன் பொருள்:(கூட்டம் பெறுமையால்) நெஞ்சம் நடுங்கத் தக்க பொறுத்தற்கரிய வருத்தம் நீங்க வந்து, கூட்டத்தால் அந்நோயைப் போக்கிக், குன்றினுக் கணித்தான சிற்றூரின்கட் செல்வான் பெயர்ந்து போகின்றவளுடைய, நெறித்துச் சுரிந்த கூந்தலினையும், நுண்ணிய கோலையு முடைய பாண்மகளிரைப் பாதுகாத்த மிக்க புகழினையும், சினம் பொருந்திய தானையினையு முடைய தித்தன் வெளியன் என்பானுடைய ஒலிக்கின்ற நீர்ப் பரப்பினையுடைய கானலம் பெருந்துறைக்கண் பொருள் மிகுதி யாகக் கொணரும் நல்ல மரக்கலங்கள் சிதையும்படி மோது கின்ற சிறிய வெள்ளிய இறுமீன்களின் தொகுதியை யொப்ப, மிக்க பகையினைச் செய்யும் வலிமை நிறைந்த பிண்டன் என் பானைத் தன் மனமாறுபாடு கெடுமாறு பொருது வென்றவெற்றி பொருந்திய வேலினையும், இசைபயக்கும் வரையா ஈகையும், களிறுகளைப் பரிசிலர்க்குக் கொடுக்கும் வளவிய மகிழ்ச்சியினையு முடைய, "பாரம்" என்னும் ஊருக்குத் தலைவனை ஆரம் அணிந்த,—நன்னன் என்பவனுடைய "ஏழில்" என்னும் நெடிய மலையைச் சார்ந்த "பாழி" யென்னும் மலையின்கட் களித்தாடும்

மயிலின் கலாபத்தை யொத்த—தோள், வலிய வில்லினையுடைய வீரர்களுக்குப் பெரிய தலைவனான நள்ளி யென்பவனுடைய மலைப்பக்கத்துத் தழைத்த சோலைக்கண் வண்டுகள் மதுவுண்ண மலர்ந்த கடவுள் விரும்பும் காந்தள் மலர்களுள்ளும் பலவாகப் பெருமிதம் நிறைந்த மெல்லிய மலர்களாகிய கையினைத்தோற்று வித்து, தன்னை புள்ளிவந்தவர் ஒன்று கூற வல்லராகவாதல், அல்லராகவாதல் இருப்பினும் அவர்க்கு மிக்க சோற்றினை அவர் தம் நெடிய பானை நிறையும்படி அளிக்கும் பெரிய யானைகளை யுடைய ஆஅய் என்பானது கானத்தின் அருகுள்ள தலையாறு என்னுமிடத்து நிலைபெற்ற மிக வுயர்ந்த மலையின்கண் உண்டாகிய மூங்கிலின்கணுவின் இடைப்பகுதியை ஒத்தவாய், நம்மைப் பிரிந்து சேய்மைக்கண்ணே அகன்று நீங்கின எனினும், கூட்டம் பெறுமுன் தந்த நடுங்கத் தக்க துயரத்தையே இனியும், தாரா நின்றன வாகலான் நாம் கூட்டம் பெற்றும் பேறேமாயினேம், என்பது.

இஃது, இரவுக் குறிக்கண் தலைமகளைக் கூடி நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. அரும்படர் தீர வந்து, சிறூர் ஆங்கண், செலீஇப பெயர்வோள், களிமயிற் கலாவத் தன்ன தோள் ஆய்மலர்நாறி, வேயமைக் கண்ணிடை புரைஇச் சேய வாயினும் நடுங்கு துயர் தரும் என வியையும்.

இரவுக் குறிக்கண் தலைமகளைத் தலைப்பெய்வான் வருபவன் கூட்டம் இடையீடு படுங்கொலோ என்னும் எண்ணத்தனாய் நடுங்கி வருகின்றானாகலின், "நெஞ்சு நடுங்கு படர்" என்றும், அப்படர்தானும், மறைப்பினும் அடங்காது மிகுதலின், "அரும் படர்" என்றும், கூறினான். ஆசிரியர் திருவள்ளுவனாரும், அதனை "இறைப்பார்க்கு, ஊற்றுநீர் போல மிகு" மென்று கூறினார். (குறள். 1161) உழை, ஏழாம் வேற்றுமைப்பொருள் பட வந்த இடைச்சொல். கூட்டம் பெற்றவழி மயிற்கலாவம் போல் மென்மையும் உயர்வு முடையவாய் இன்பம் பயந்த சிறப்புநோக்கிக் "களிமயிற் கலாவத் தன்ன தோள்" என்றும், அவ்வின்பம் தந்து பெயர்ந்தவழித் தாராமையாய் "அறிதோற்றறியாமை" காண்பது போல் மறைந்து துயர்தருதலின்,

"நடுங்குதுயர்தரும்" என்றும், நெருங்கியவழித் தன் பிரிவிணு ளதாகிய மெலிவு காட்டியும், நீங்கியவழித் தன்மனத்தே தோன்றி நினைப்பித்தும் வருத்துதலின் "சேயவாயினும் நடுங்கு துயர் தருமே" என்றும் கூறினள். உம்மை, எச்சவும்மை.

பாண்மகள் கையில் மூங்கிற்கோல் உடையளாதல், தன்பிறப் புணர்த்தற்கென்ப. இங்ஙனம் பாண்மகள் ஒருத்தி காதம்பரி என்னும் வடமொழி நூலின்கண்ணும் கூறப் படுகின்றாள். அவள் கையிலும் மூங்கிற் கோலொன் றிருந்ததென்பது கூறப்பட் டிருக்கிறது. வெளியன் என்பது வெளியம் என்னும் ஊரினன் என்னும் பொருளதென்பர். இவன் உறந்தைக்கண் இருந்து அரசாண்டவன் என்றும், தித்தன் வெளியன் என்றே ஆசிரியர் பரணரே பிறிதோரிடத்தும், "மலிதார்த், தித்தன் வெளியன் உறந்தை நாளவை" (அகம். 226) எனக் கூறியுள்ளார். இவன் "வீரை வெளியன் தித்தன்" என்றும் "வீரை வேண்மான் வெளியன் தித்தன்" (நற். 58) என்றும் "வீரை வெளியன் தித்தனூர்" என்றும் கூறப்படும் சோழமன்னன். அகநானூற் றில் "பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ" என்று தொடங்கும் பாட்டு இவன் பாடியது. வெளியனல்லூர் என்னும் ஊர் ஒன்று திருவத்திபுரத்துக்குக் கிழக்கே மூன்றுமைல் தூரத்தில் உளது.

கானற் பெருந்துறைக்கண் தனம் தரும் வலிய மரக்கலங்கள் சிதையுமாறு சிறியவும் வெண்மையவுமாய இறுமீன்கள் கூடித் தாக்கும் என்ற வுவமையால் வில்லேந்திய வலிய வீரர்களுடன் வரும் தன் படையைச் சிதறுமாறு பிண்டனது சேனை போந்து தாக்கினமை பெற்றாம். அச்செயல் விளங்க ஆசிரியர் "உறுபகை தரூஉம் மொய்ம்மூசு பிண்டன்" என்றார். எனவே நன்கலம் சிதையுமாறு இறவின் குப்பை தாக்கினும், அக்கலங்களின் விசையால் எதிரழிந்து அவை இரிந்தோடல் போலப் பிண்டன் சேனையுமழிந்ததென்பார், "உண்மூரணுடையக் கடந்த" வென்றார். முருகக்கடவுள் விரும்பும் பூவாகலின் "கடவுட் காந்தள்" என்றார். திருமால் உயர்த்த கொடியைக் கடவுட் கொடிஎன்பது போல (பரி. 4. 43 உரை)

மலர், உவமையாகுபெயராய்க் கையினை யுணர்த்திற்று; "கொடியியலார் கைபோற் குவிந்தன முகை" என்றார் பரிபாடலினும். (பரி. 20. 98) "வல்லினும் வல்லாராயினும் சென்றோர்க்குச் சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும், மாஅல் யானை ஆஅய் என்றது ஆஅய் அண்டிரனது கொடைமடம் கூறியவாறு. சாலவிழ் நெடுங்குழி என்பதற்குச் சால் என்னும் மட்கலத்து ஆழ்ந்த குழி நிறைய எனினுமாம். தலையாற்று நிலைஇய என்பதற்குக் காரணத்தைச் செல்லும் நெறியின் முதற்கண்ணே நிலைபெற்ற எனினுமாம். அதுபோது அது பின்முன்னாகத்தொக்க ஆறுவதன், தொகை. சேயவாயினும் என்புழிச் செம்மையுடையவாயினும் என்னுரைப்பினுமாம்.

இதன்கண் பிண்டனது சேனை நன்னன் சேனையை எதிரூன்றித் தாக்குதலும், அது நோக்கி நன்னன் சேனை அச்சேனையை யழித்துப் பூசல் மாற்றுதலின், இது குறிஞ்சியின் புறமாகிய வெட்சி யாயிற்று. துறை பூசன்மாற்று. ஆய் அவிழ் வீசுதல் வெட்சியில் உண்டாட்டு.

இரவக் குறிக்கண் கூட்டம் பெற்றவன் பெறுதான் போல நெஞ்சொடு நொந்து கூறுதலின், மெய்ப்பாடு: தன்கட்டோன்றிய வருத்தம் பற்றிய அழுகை. பயன்: நெஞ்சொடு தன் ஆராமை கூறுதல்.

குறிப்பு:—இரவுக்குறிக்கண் கூட்டம் பெற்றுச் செல்லும் தலைமகன் தன் நெஞ்சொடு கூறுவது பொருளாகப் பாடத் தொடங்கிய ஆசிரியர் முதற்கண் தலைவியின் இயல்கூறிப் பின் அவள் தோள்நிலை கூறுவார் மாட்டுறுப்பாகத் தித்தனது கானலம் பெருந்துறைக்கண் கலங்கள் வரும் சிறப்புக் கூறி அதனையே உவமையாக இயைத்துப் பிண்டனை நன்னன் வென்றமையும், அவனுடைய பாரம் என்னும் நகரம், ஏழில் நெடுவரை, பாழிமலை முதலியவற்றின் நலமும் விளக்கிப் பின்னர் அவள் கைச்சிறப்பினை நள்ளியின் சோலையடுக்கத்தைப் புகழுமுகத்தாற் கூறிப் படிப்போர் மனத்தைத் தம்வயம் கொண்டு இச் செய்திகளுள் நடுநாயகமாய் நன்னன் புகழ் அவர்தம் மனதிற் பதிய வைத்துள்ளமை நோக்கி யின்புறற் பாற்று. இங்ஙன் ஒவ்வொருபாட்டையும் விரித்தெழுதின், இது மிக விரியுமாகலின், இனி, ஒவ்வொரு பாட்டையும் பொதுப்பொருள் கூறுமுகத்தால் விளக்கிச் செல்லுகின்றேன். (தொடரும்.)

# மதிப்புரை

நன்மதிமாலை:—தெலுங்குமொழியில் வழங்கும் சுமதி சதகம் எனும் நீதி நூலின் பொருளைத் தமிழரும் கற்கும் பொருட்டு மூல நூலின் கருத்தைப் பெரும்பாலும் தழுவி வித்துவான். திரு. ஐ. நடேசபிள்ளையவர்களால் இயற்றப்பெற்றஅறநூலாகும். நூறு வெண்பாக்களாலாய இந்நூலை தமிழ் நாட்டிலுள்ள பள்ளி மாணவர்களும் தமிழன்பர்களும் பயிலவும், போற்றவும் முற்பட்டு ஆசிரியர் அவர்களை இத்துறையில் ஊக்குவார்களாக.

உ

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

## கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "மார்கழி" நன்கொடை

| திங்கள் நன்கோடை | | ரூ. அ. ப. |
|---|---|---|
| திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன் | அவர்கள் | 5 0 0 |
| ,, K. நடராசன் B.A., B.L., (Advocate.) | ,, | 5 0 0 |
| ,, K. பிரணதார்த்திகரன் பிள்ளை | ,, | 1—4—0 |
| ,, T. S. சபாபதி பிள்ளை B.A., (Retired. Dt. Registrar.) | ,, | 1 0 0 |
| ,, R. விசுவநாதன் | ,, | 0 4 0 |

## ஆண்டு நன்கோடை

| | | |
|---|---|---|
| திரு. C. வேதாசலம் பிள்ளை B.A., B.L., | அவர்கள் | 5—0—0 |
| ,, L. S. மாணிக்கம் பிள்ளை | ,, | 5—0—0 |
| ,, M. A. முகம்மது இப்ராகிம் B.A., B.L., | ,, | 3—0—0 |
| ,, க. நல்லமுத்து நாட்டார் | ,, | 3—0—0 |
| ,, S. பஞ்சநதம் பிள்ளை M.A., L.T., | ,, | 2—0—0 |
| ,, வ. மருதப்பா பிள்ளையும் குமாரர்களும் | | 2—0—0 |
| ,, பாப்பண்ணு பிள்ளை குமாரர்கள் | | 2—0—0 |
| ,, P. சுப்பிரமணியன் B.A., (King & Co) | ,, | 1—0—0 |
| ,, R. மாணிக்கவாசகம் பிள்ளை (Clerk, District Board Office.) | ,, | 1—0—0 |
| ,, S. இராமலிங்கசாமி நாட்டார் B.A., B.L., | ,, | 1—0—0 |
| ,, B. ஆழ்வார்சாமி நாயடு | ,, | 1—0—0 |
| ,, O. A. நாராயணசாமி அய்யர் B.A., B.L., | ,, | 1—0—0 |
| ,, Rm. P. Km. குமரசாமி பிள்ளை (Banker) | ,, | 1—0—0 |
| ,, T. D. மகாலிங்கம் பிள்ளை B.A., B.L., | ,, | 1—0—0 |
| ,, A. S. நாராயணசாமி பிள்ளை (Clerk District Board Office.) | ,, | 1—0—0 |
| ,, R. சீநிவாசய்யா (Contractor) | ,, | 1—0—0 |
| ,, N. S. இராமசாமி முதலியார் (Cloth Merchant.) | ,, | 1—0—0 |
| ,, S. இராமசாமி அய்யர் B.A., B.L., | ,, | 1—0—0 |
| ,, A. கைலைகுரு (Co-operative Inspector.) | ,, | 1—0—0 |
| ,, R. வேங்கடாசலம் பிள்ளை (Tamil Lecturer, Trivadi.) | ,, | 1—0—0 |
| ,, P. மார்க்கபந்து முதலியார் (Veterinary Surgeon.) | ,, | 1—0—0 |
| ,, N. இரத்தனசாமிக் கண்டியார் (Board Boys School Perambur.) | ,, | 1—0—0 |
| Miss. M. S. விசயாள் | ,, | 1—0—0 |

## மருத்துவசாலைக்குதவிய 'மார்கழி' நன்கோடை

| | |
|---|---|
| திரு. V. துரைசாமி பிள்ளை அவர்கள் அஞ்சல் நிலையத்தலைவர், திருக்காட்டுப்பள்ளி. | 1—0—0 |